The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. டிசம்பர் 1918. இலக்கம் 12.

## LITURGICAL AND HOMILETIC NOTES.

## தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

### மந்திரித்துக்கொள்ளுதல்.

சர்வேசுரன்பேரில் நாம் நம்பிக்கையும் விசுவாசமுங்கொண்டு நம்மை மந்திரித்துக்கொண்டாலன்றி மற்றப்படி அதனால் நமக்கு இயாதோர் நன்மையும் பிரயோசனமுமுண்டாகாதென்பதைத் திட்டமாய்த்தெரிந்துகொள்வோமாக. எப்படி விசுவாசமும் நம்பிக்கையுமின்றி வேண்டிக்கொள்ளுகிறவர்களுடைய ஜெபத்துக்கு சர்வேசுரன் காதுகொடாரோ, அப்படியே விசுவாசமும் நம்பிக்கையுமின்றி தம்மை மந்திரித்துக்கொள்ளுகிறவர்களுக்கும் அவர் தம்முடைய ஆசீரை அருளார். அதேனெனில், நாம் மந்திரித்துக்கொள்ளுகையில் நமக்குண்டாயிருக்கும் பொல்லாப்பை விலக்கவோ, அல்லது நமக்கு எவ்வித பொல்லாப்பும் வரவொட்டாமல் தடுக்கவோ அவரை இரந்து கேட்டுக்கொள்ளுகிறோம். ஆனபடியால், நாம் அவர்பேரில் எவ்வளவுக்கு உருக்கமுள்ள விசுவாசமும் உறுதியான நம்பிக்கையும்வைத்து மந்திரித்துக்கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கு நாம் அவருடைய ஆசீருக்கு அருகராவோமென்பதை தெரிந்துகொள்ளவேண்டியது. இது காரியத்தை நமக்கு வற்புறுத்திப் போதிக்கும் பொருட்டு அர்ச். இயாகப்பர் பின்வருமாறு கூறியுள்ளார்: "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருப்பானாகில் ஒருவனையும் புறக்கணியாமல் யாவருக்கும் ஏராளமாய்க் கொடுக்கிற சர்வேசுரனிடத்தில் கேட்கட்டும்; அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனால் அவன் சற்றுந் தளராத விசுவாசத்தோடே கேட்கக்கடவான்; ஏனெனில், தத்தளிக்கிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிக்கொத்த மனிதன் ஆண்டவரிடத்தில் ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாமென்று எண்ணாதிருப்பானாக." (இயாகப்பர், 1: 5—7.) ஆம், சர்வேசுரன் மட்டில்லாத வல்லமையும் அளவறுக்கப்படாத இரக்கமுமுள்ளவரென்றெண்ணி, அவரை அண்டிப்போனாலன்றி நமக்கு எதுவும் கைகூடாதென்று அறிந்துகொள்வோமாக. ஐயோ! எத்தனையோ

கிறீஸ்துவர்கள் தங்களுக்கு இயாதோர் வியாதி வந்துவிட்டால் கோவிலுக்கு வந்தோ, அல்லது குருவானவரை வீட்டுக்கு வரவழைத்தோ மந்திரித்துக்கொள்ளுகிறார்களென்றாலும், கோணங்கியிடத்திலும் குறிசொல்லுகிறவனிடத்திலும் மந்திரித்துக்கொள்ளவுஞ் செய்கிறார்கள். மெய்யான சர்வேசுரன்மட்டில், அவர்களுக்கு உறுதியான விசுவாசமாத்திர மிருக்குமானால், அவருக்கு நேர்விரோதியாகிய பசாசைக் கும்பிடுங் கோணங்கியிடத்தில் போவார்களா? இத்தகைய அவவிசுவாசிகளைப்பற்றியன்றோ நமது கர்த்தர் "எவனும் இரண்டு எசமான்களுக்கு ஊழியம் செய்யமுடியாது" என்றார்? இவர்கள் எப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்கள்! இவர்கள் விசுவாசமுள்ள கிறீஸ்துவர்களா? இவர்களுக்குத் தேவாசீருண்டாகுமா?

* *

மேலும் நாம் மந்திரித்துக்கொள்ளுகையில் நம்முடைய பாவாக்கிரமங்களுக்காகப் பச்சாதாபப்பட்டு மந்திரித்துக்கொள்ளுவோமாக. தங்களிடத்திலுள்ள பாவ வழக்கப் பழக்கங்களை விட்டுவிட மனமில்லாமலும், தாங்கள் கட்டிக்கொண்ட பாவங்களுக்கு மனஸ்தாபப்படாமலும் மந்திரித்துக்கொள்ளுகிறவர்கள் யாதோர் பலனையுங் கண்டடையார்களென்பது திண்ணம். அப்பேர்ப்பட்டவர்களை அர்ச். பாப்பானவர் மந்திரித்தாலுஞ் சரி, ஓர் மேற்றிராணியார் அல்லது ஓர் குருவானவர் மந்திரித்தாலுஞ் சரி, அல்லது பரலோகத்திலிருந்து ஓர் அர்ச்சியசிஷ்டவர் இறங்கிவந்து மந்திரித்தாலுஞ் சரி, அவர்களைச் சர்வேசுரன் ஆசீர்வதியார். ஏனெனில் "தின்மையைச் செய்கிறவர்களுக்கோ ஆண்டவருடைய முகம் விரோதமாயிருக்கின்றது" (1. இராயப்பர் 3: 12.) மனந்திரும்பப் பிரயாசைப்படாத பாவிகளைப்பற்றி தாவீது இராசா பாடியுள்ளதாவது: "பாவியோ சாபத்தை விரும்பினான்; அதுதான் அவனுக்கு வரும். அவன் ஆசீரை விரும்பாமற்போனான்; அது அவனை விட்டு விலகி நிற்கும்" (தாவீ. சங். 108 : 17) என்பதேயாம். சர்வேசுரன் புண்யவாளரை மேன்மேலும் நேசிக்கிறார். ஆனபடியால், அவர்கள் மந்திரித்துக்கொள்ளுகையில் அவர்களுக்குத் தம் ஆசீர் நிரம்பக் கிடைக்க அருள்புரிகிறார். அப்படியே பாவிகள்பேரிலும் தம் ஆசீர் வர அவர் ஆசிக்கிறாரென்றாலும், அவர்களோ தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்ப ஆசிக்கிறதில்லை. மனஸ்தாபப்பட்டு மந்திரித்துக்கொள்வார்களானால், அவர்கள்பேரில் அவர் இரக்கப்பட்டு தம் ஆசீரை அளிப்பதோடு அவர்கள் மனந்திரும்பவும் கிருபைசெய்வாரென்பது வெளிப்படை. குருவானவர் யாதொருவரை மந்திரிக்கும்போது என்ன செய்கிறார்? சர்வேசுரனை நோக்கி செபிக்கிறாரன்றோ? யாருக்காக செபிக்கிறார்? மந்திரிக்கப்படுகிறவருக்காக செபித்து மன்றாடுகிறார். மந்திரித்துக்கொள்ளுகிறவரும் மந்திரிக்கிறவரோடு ஏகோபித்து உள்ளபடியே விசுவாசத்துடனும் ஆவலுடனும் வேண்டி, தன்னைக் கர்த்தருடைய கிருபைக்குப் பாத்திரமாக்கிக்கொள்ளாமற்போனால் ஆசீர் எப்படி பலிக்கும்?

* *

சர்வேசுரனுடைய அருட்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் எப்படி ஆசை ஆவலுடன் அவைகளை அவரிடம் இரந்து கேட்டுக்கொள்வோமோ, அப்படியே ஆசை ஆவலுடன் மந்திரித்துக்கொள்ளவும்வேண்டியது. ஆம், மெய்யான மனதோடு மந்திரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத்தான் தேவாசீர் உண்டாகும். மெய்யான மனதுள்ளவர்களெல்லோரும் தங்களுக்குத் தேவாசீர் கிடைக்குந் தருணங்களை விட்டுவிடார்கள். அதாவது திவ்ய பூசைகாணவும், திவ்யநற்கருணை ஆசீர்வாதத்துக்கும் இன்னுமற்ற பொது ஜெபங்களுக்கும் கோவிலுக்குப் போகவும் தவறார்கள். அதேனெனில், குருக்கள் இச்சமயங்களில் தங்களுடைய அர்ச்சிக்கப்பட்ட கரங்களினால் ஆசீர்வதிக்கிறார்கள். அநேகமாய் தங்களுடைய கரங்களில் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமான சேசுக்கிறீஸ்துநாதரையே ஏந்தி ஆசீர்வதிக்கிறார்கள். ஆனால், தங்களுக்குத் தேவாசீர் கிடைக்கும் இத்தகைய தருணங்களையெல்லாம் எத்தனையோ கிறீஸ்துவர்கள் அலட்சியஞ் செய்துவிடுகிறார்கள். பூசைக்கு வந்தபோதிலும் பூசைமுடிவில் கொடுக்கப்படும் கடைசி ஆசீர்வாதத்துக்கு முதலாய் இராமல் எழுந்துபோய்விடுவார்

கள். கடன் திருநாட்களில் பூசைக்குமாத்திரம்வந்து மற்ற சமயங்களில் கோவிலே யெட்டியும் பாரார்கள். இன்னும் எத்தனையோ பேர் கடன் பூசைக்கு முதலாய் வாரார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் பக்தி விசுவாசக் குறையுள்ளவர்களாயிருக்கிறபடியால், அவர்கள் ஆசீர்வாதங் கொடுக்கப்படும் தருணங்களில் ஆஜராயிருந்தபோதிலும் அவர்களுக்கு யாதோர் பலனுங் கிடையாமற்போகலாகும். ஆகையால்,நாம்மந்திரித்துக்கொள்கையில்பக்தி விசுவாசத்தோடு மந்திரித்துக்கொள்வதுமல்லாமல், நம்முடைய பாவாக்கிரமங்களுக்காகப் பச்சாதாபப்பட்டு சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தை யடைய ஆசை ஆவலோடும் மந்திரித்துக்கொள்வோமாக.

## CATHOLIC TRUTH SOCIETY.
## கத்தோலிக்கு வேத உண்மைப் பிரசுரச் சபை.

1917ஆம் ஜனவரிமீ க் கடைசியில் பெங்களூரில் மேற்றிராணிமார்கள் கூடிச் செய்த தீர்மானங்களில் "சென்னை இராஜதானியெங்கும் கத்தோலிக்கு வேத விஷயங்களை விளக்கிக்காட்டும் பத்திரிகைகள், துண்டு புத்தகங்கள் முதலியவற்றை பரப்புவதற்காக கத்தோலிக்கு வேத உண்மைப் பிரசுரச் சபை" யொன்று ஏற்பாடு செய்யவேண்டுமென்பது ஒன்றல்லவா? அந்தத் தீர்மானத்தின்படி சேசு சபை, சங். லக்கோம் சுவாமிகளும், இன்னும் வேறு மூவரும் சேர்ந்து, அத்தகைய சபை ஸ்தாபிப்பதற்கு என்ன தேவை, எப்படி அதைத் தொடங்குவது என்பனமுதலிய விவரங்களை விஸ்தாரமாய் எடுத்துக்காட்டியுள்ள குறிப்புக்களும், அச்சபையை சித்திபெற நடத்துவதற்கான மசோதா ஒழுங்குகளும் அடங்கிய துண்டு புத்தகமொன்றை இப்போது வெளியிட்டிருக்கிறார்கள்.

ஷெ சபை பிரதமத்தில் சென்னை இராஜதானிக்குமாத்திரம் உரித்தானதாகக் கருதப்பட்டபோதிலும், அது இப்போது, ஷெ துண்டு புத்தகத்தில் குறிக்கப்பட்டிருக்கிறபடி, இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா தீபகற்பம் ஆகிய இந்த ஐந்து நாடுகளையும் கவர்ந்ததாய்த் தெரியவருகிறது. இது நல்லகாரியந்தான். ஏனெனில், இந்தியாவின் ஒரு சிறு பாகமாத்திரம் இப்பெரிய கருமத்தைத் தொடங்கிச் செய்வதைப் பார்க்கிலும், மேற்கண்ட ஐந்து நாடுகளுஞ் சேர்ந்து செய்வதினால் வேலை சுலபமாவதோடு, பயனும் பெருக்கமடையுமன்றோ? மேலும் இந்த நாடுகளிலுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களுக்குள் ஒற்றுமையும் நேசபான்மையும் அதிகரிக்கலாகும்.

இப்பேர்ப்பட்ட சபை ஒன்றுஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதைநாம் ஆவலுடன் ஆமோதிக்கின்றோம். சர்வேசுரனுடைய இராச்சியம் இவ்வுலகில் பெருகவேண்டுமென ஆசைகொள்பவர் அனைவரும் அதை ஆமோதிக்காமற்போகார். அதன் முக்கிய கருத்தானது,சத்தியவேதத்தின் உண்மை விவரங்களை யறியாதார்க்கு அறிவிப்பதானதால் அதை யாதரிக்க மனதில்லாதவர் ஒருவருமிரார்.

ஒரு வியாபாரியானவன் தன் சரக்கை விற்பனைசெய்வதற்கு நானாவித முயற்சிகளைத் தேடிச்செய்கிறான். சமாசாரப் பத்திரிகைகளில் அதன் சுகுணங்களை விஸ்தரித்தெழுதி விளம்பரஞ் செய்கிறான். அதைப்பற்றி முகதாவில் பல்லோரிடத்தும் சமயம் நேரிடும்போதெல்லாம் பிரஸ்தாபித்துப் புகழ்ந்து பேசுகிறான். பார்ப்போர் கண்களைக் கவரும்படி படங்கள் பதிப்பித்து பிரசுரிக்கிறான். தெருத்தெருவாய் துண்டு பத்திரங்கள் வழங்குகிறான். அழகியபடங்கள்போட்டபஞ்சாங்கங்கள் பரிமாறுகிறான். ஜனங்களுக்கு அடிக்கடி உபயோகப்படுகிற பொருட்களைச்செய்து அவைகளில் தன் சரக்குகளைக் குறித்துப் புகழ்ச்சியா யெழுதி, அவைகளை ஊரெங்கும் இலவசமாய் வழங்குகிறான். இவ்வித வியாபார விளம்பரங்களடங்கிய படங்கள், விசிறிகள், கோப்பைகள், பொம்மைகள், கடிகாரங்கள், கத்திகள், கத்திரிக்கோல்கள், கடுதாசிப் பளுவுகள் முதலியவைகள் வழங்கப்படுவதை நாம் நாடோறும் காண்கிறோம். இவ்விதமான விளம்பரங்களிலே வியாபாரிகள் ஆயிரம் ஆயிரமாய், இலட்சம் இலட்சமாய் செலவழிப்பதையும் நாம்

அறிவோம். இவையெல்லாம் என்னத்திற்காகச் செய்கிறான்? தன் சரக்கின் தன்மையை சகலருக்குந் தெரிவித்து, அதனால் அதை விலையாக்கவன்றோ? சரக்கின் தன்மை தெரியாமற்போனால் யார் அதைக் கொள்வார்கள்? சரக்கின் தன்மையை சகலருக்குந் தெரிவிக்கவே இத்தனையுஞ் செய்கிறான் வியாபாரி. அதுபோலவே நமது சத்திய வேதமானது அஞ்ஞான நிறைந்த இந்த நாட்டில் பரவவேண்டுமென்று விரும்புவோமானால், அதன் தன்மையை, உண்மையை, சத்தியத்தை மேற்கண்ட வியாபாரி செய்வதுபோல், பல உபாயமான வழிகளால், அவைகளை அறியாதார்க்கு அறிவுறுத்தவேண்டாமோ? இப்படிச் செய்வதுதான் ஷை "கத்தோலிக்கு வேத உண்மைப் பிரசுரச் சபை"யின் பிரதான வேலையாகும்.

வேதம் பரவச்செய்தலின் ஒரு பாகமாகிய ஷை வேலையானது உலகத்தை வெறுத்து வந்துவிட்ட குருக்கள்முதலானோர்களின் வேலையேயன்றி, அதீக்ஷதராகிய (Laymen) மற்றக் கிறீஸ்துவர்களின் வேலையல்லவென சிலர் எண்ணுவார்கள் போலும். அப்படியல்ல; அவ்வாறு எண்ணுவது பிசகாகும். தேவஸ்நேகமும், பிறர்ஸ்நேகமுங் கிஞ்சித்துமில்லாதவரே அப்படி எண்ணுவார்கள். குருக்கள்முதலியோரால்மாத்திரம் இந்தப் பெரிய வேலையை நிர்வகிக்க முடியாது. ஏற்கெனவே சத்திய திருச்சபையி லுட்பட்டிருக்கிறவர்களின் ஞான காரியங்களை சரிவரக் கவனிக்கப் போதுமான சாவகாசமும், பொருளும் அவர்களுக்குக் கிடையாமலிருக்கின்றன. பொருளும் சாவகாசமும் கிடைக்கிற அளவுக்கு அவர்கள் இவ்வேலையைக் கவனித்துத்தான் வருகிறார்கள். "வேலையோ அதிகம், உழைப்பவர்களோ கொஞ்சம்பேர்கள்" ஆனதினால், விசேஷமாய், யுத்தத்திற்காக அநேக குருக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஐரோப்பாவிலிருந்து வந்துகொண்டிருந்த பொருளுதவியும் நிறுத்தப்பட்டு, தங்கள் அலுவல்களில் அதிமுக்கியமானதைமுதலாய் நிர்வகிக்கப் போதுமானபேர்களும், பொருளுமில்லாது தவிக்கும் இக்காலத்தில், குருக்களுக்கு அதீக்ஷதராகிய மற்றக் கிறீஸ்துவர்கள் தங்களாலான உதவிபுரியவேண்டாமோ? இருதரத்தாரும் ஏகோபித்து ஒத்து உழைத்தால்தான், இந்தியாவை மனந்திருப்புதலாகிய பெரிய வேலைசித்தியாகும். மேலும் இந்த மனந்திருப்பும்வேலையில், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாகரீக நாடுகளில், அதீக்ஷதர்களே பெரும்பான்மையும் முன்னின்று குருக்களுடன்கூட இருந்து உழைத்துவருகிறார்கள். அந்நாடுகளில் கணக்கற்ற கத்தோலிக்கு வேத உண்மைப் பிரசுரச் சபைகள் அவ்வாறே இருதரத்தாராலும் நடத்தப்பட்டுவருகின்றன. "வேதம் பரம்புதல் சபை" (Propagation of the Faith) என்னும் சபை நெடுங்காலமாய் நடைபெற்றுவருகிறது. இதன் மூலமாய் இந்தியாவின் மனந்திரும்புதலுக்காக இந்நாட்டில் உழைத்துவரும் பல மிஷன்கள் யுத்தத்துக்குமுன்னே அடைந்துவந்த பொருளுதவி கொஞ்சமல்ல. அஞ்ஞானமானது அநேககாலமாக ஆழ்ந்து வேரூன்றியிருக்கும் இந்த இந்தியா தேசத்தை மனந்திருப்புவதானது இலேசாய், அல்லது சிறிது காலத்துக்குள் செய்துமுடிக்கத்தக்க வேலையல்ல. கிறீஸ்துவர்களெல்லாரும், தீக்ஷதரும் சரி, அதீக்ஷதரும் சரி, எல்லோரும் ஏகோபித்து, பல வருஷங்களாகப் பெருமுயற்சிசெய்து ஆகவேண்டிய வேலையாகும். ஆனதுபற்றி இந்த அதியுத்தமமான பிறஸ்நேகக் கருமத்திற்குக் கத்தோலிக்கரனைவரும், புருஷரும் பூவையருங் கைகொடுத்து, தங்கள் தங்களாலான உதவிசெய்யவேணுமென்று நமது நண்பர்களை பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஷை சபையின் கருத்துக்களாவன:—

(1) கத்தோலிக்கு வேத புத்தகங்கள், பத்திரிகைகளை விசேஷமாய் இங்கிலீஷ் பாஷையில் அச்சிட்டு விஸ்தாரமாய் வழங்குதல்.

(2) சுதேச பாஷைக் கத்தோலிக்கு வேத உண்மைப் பிரசுரச் சபைகளோடு ஒன்றித்து, அவைகளுக்குக் கூடுமான உதவிசெய்தல்.

(3) கத்தோலிக்கர்களுக்குள்ளே ஏற்படும்படியான பல ஆட்சேபனைகளையும், சந்தேகங்களையும் நிவர்த்திசெய்து, அவர்களைச்சத்தியவேதத்திலே நிலைநிறுத்தப் பிக்கவும், அவர்களுக்குள்ள பக்தி

யையும் வேத வைராக்கியத்தையும் தூண்டி, அவைகளை விருத்திபண்ணவு மான வேத புத்தகங்கள் துண்டுபுத் தகங்களை ஸவதரித்தல்.

(4) கிறீஸ்து வேதத்தையும், கத்தோலிக்கு வேதக்கொள்கைகளையும் கெடுக்கக்கூடிய ஏதுக்களைத் தடுத்தல்; நாஸ்திகம், பிரிவினை, நையாயிகம், நிரீச்சுரவாதம், அஞ்ஞானம், பொய் மதம், துராசாரம் முதலியவற்றைக் கண்டித்தல்; கத்தோலிக்கு வேதத்தையும், அதன் வேத சத்தியங்களையும் இந்தியா ஜனங்களுக்குப் போதித்தல் ஆகிய இவைகளுக்கு வேண்டிய வசதிகளையும், வழிவகைகளையும் சபையின் மெம்பர்களுக்கும், பொதுவாய்க் கத்தோலிக்கர்களுக்கும் ஸவதரித்துக் கொடுத்தல்.

(5) கிறீஸ்துவரல்லாதார்க்கும், கத்தோலிக்கரல்லாதார்க்கும் கத்தோலிக்கு வேத சத்தியங்களை விளக்கிக்காட்டவும், நமது வேத விஷயமாய் அத்தகையோர்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேக வினக்களுக்கு விடையும், ஆட்சேபனைகளுக்கு சமாதானமும் பிறஸ்நேகத்துடன் நேசபான்மையாய் எடுத்தோதவும் ஒரு மாதாந்தர சமாசாரப் பத்திரிகை பிரசுரித்து, அதை மிகவும் சொற்ப விலைக்கு வழங்குதல்.

(6) கத்தோலிக்கு வேத சத்தியங்களுக்கும் ஆசாரங்களுக்கும், பொதுவாய் கத்தோலிக்கு வேதத்துக்குமே விரோதமாய்ச் சொல்லப்படும் ஆட்சேபனைகளுக்கு மறுப்பு எழுதி அவைகளைக் கண்டித்து, கத்தோலிக்கு வேத உண்மைகளை யறியாத அந்நிய மதத்தாருக்கு அவைகளை விளக்கிக்காட்டுதல்.

மெம்பர்கள்.—கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாகிய ஆண்களும், பெண்களும், ஐரோப்பியரும், இந்தியரும், தீக்ஷதரும் அதீக்ஷதரும், ஆயுள் அல்லது வருஷ சந்தாவைச் செலுத்தி இச்சபைக்கு மெம்பராகலாம்.

சந்தா விவரம்.—ரூ 100 ஒருமிக்கக் கொடுப்பவர்கள், கௌரவ ஆதரணைக் கர்த்தாராகவும், ரூ 50 ஒருமிக்கக் கொடுப்பவர்கள் ஆயுள் மெம்பராகவும், ரூ 3 வருஷாந்தரம் கொடுப்பவர்கள் சாதாரண மெம்பராகவும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

நன்கொடை.—இப்போது பிரேரேபிக்கப்படும் இந்த மகத்தான சபை சித்தி பெற நடப்பதற்கு மேற்கண்ட மூன்று வித சந்தாக்கள் எவ்வளவும் போதாதாகையினால், அதிகங் கொடுக்கக்கூடியவர்கள், நன்கொடையளித்து, இம்முயற்சியை கைதூக்கிவிடுவார்களெனக் கோரப்படுகிறது. புறத்தியார் ஆத்தும ஈடேற்றத்தையும் இந்தியா மனந்திரும்புதலின் விஷயமாய் தனக்குள்ள கடமையையும் சரியாய் சிந்தித்து மதிக்கும் ஒவ்வொரு கத்தோலிக்குக் கிறீஸ்துவரும், இந்த சபையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சபையின் மெம்பர்களுக்கு இச்சபையால் பிரசுரிக்கப்படும் புத்தகங்கள், அவரவர்கள் செலுத்தியிருக்கும் தொகையின் அளவுக்குத்தக்கபடி இலவசமாய்க் கொடுக்கப்படும்.

இது விஷயமாய் வேறு விவரங்கள் வேண்டுவோரும், நன்கொடை, சந்தா அனுப்ப விரும்புவோரும், திருச்சினுப்பள்ளி கண்டோன்மென்ட், "மார்னிங் ஸ்டார்" மானேஜர், ம-ள-ள-ஸ்ரீ ஏ. ஜெகந்நாதம் பிள்ளையவர்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

---

அனேக கனமான பாவங்களைக் கட்டிக்கொண்ட ஒரு பெரும் பாவியானவன், ஒரு குருவானவரிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி போனான். அவன் இத்தனை சாவான பாவங்களைக் கட்டிக்கொண்டதை அறிந்த அந்தக் குருவானவர், அவனுக்குத் தகுந்த புத்திமதி சொல்லி பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுத்தபின், இதுமுதற்கொண்டு அப்பேர்ப்பட்ட பாவங்களைக் கட்டிக்கொள்ள சோதனை வரும்போது, தேவமாதாவை நினைத்து, "அர்ச். மரியாயே! எனக்கு உதவியாக வாரும்" என்று சொல்லும்படி அந்தப் பாவிக்குக் கற்பித்தார். இந்தச் சிறு ஜெபத்தால் அவன் அநேக கனமான பாவங்களுக்குத் தப்பித்துக்கொண்டான்.

—(Chisholm)

## THE LATE BISHOP BARROSO.

## அந்தோனியோ பரோசோ ஆண்டவரவர்களின் தேகவியோகம்.

பரோசோ ஆண்டவர் போர்த்துகால் தேசத்தின் ரெமெல்-பார்செல்லோ என்ற ஊரில் 1853-ம் ஆண்டில் ஜனனமானார். அவர் 1873-ம் வருஷம் செர்நாஷ் நகரின் அந்நிய தேசத்து போதக குருமடத்தில் சேர்ந்து, புண்ணிய பயிற்சியிலும், கல்வி சாஸ்திரங்களிலும் தேர்ச்சியும் புகழும் அடைந்து 1879-ம் வருஷம் குருப்பட்டம் பெற்றார். ஆப்பிரிக்கா தேசத்தின் போர்த்துகீஸ் காங்கோவுக்கு 1880-ம் வருஷம் அனுப்பப்பட்டார். அங்கு சென்ற மறு வருஷத்தில் திவ்ய இரட்சகர் மிஷன் என்று விளங்கும் ஓர் நவமான விசாரணை பங்கை ஏற்படுத்தினார். ஆங்கிலேய பதிதரும் அவ்விடத்தில் சென்று, அந்நாட்டின் அரசனைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு பதித கோட்பாடுகளை அங்கு அநுகூலமாய்ப் போதித்துவந்தார்கள். ஆனால் பரோசோ சுவாமியார் மனங் கலங்காமல், திருச்சபையின் அபிவிர்த்திக்காக மெத்த உற்சாகத்துடன் அல்லும் பகலும் அயராமல் உழைத்து வந்தார். அந்நாட்டின் தலைவர்கள் தங்களுக்குண்டான கலகங்களிலும் வியாச்சியங்களிலும், தங்களுக்குப் புத்திமதிகள் புகட்டவும், தங்களைச் சமாதானப்படுத்தி தங்களுக்கு ஒழுங்குகள் ஏற்படுத்தவும் நடுவராக அவரையே தெரிந்துகொண்டார்கள். இவருடைய பரோபகார காருண்ணிய செயல்களினாலேயே அந்நாட்டில் பலத்த குழப்பங்களும், இரத்தக்களரியாய் முடியக்கூடிய கலகங்களும் ஒழிந்துவிட்டன. அந்நாட்டு ஜனங்கள், தங்களுக்குள் நடக்கும் விவாதங்களில் பரோசோ சுவாமியார்மேல் ஆணையிட்டு சத்தியஞ் செய்வது வழக்கமாயிருந்தது. அதை அவர்கள் மெத்த பயபக்தியான ஓர் கடமையாகப் பாவித்து வந்தார்கள். இவ்வளவு பேரும் பெருமையும், சீரும் செல்வாக்கும் இச்சனங்களிடையில் இவருக்கு உண்டாயிருந்தது.

1891-ம் வருஷம் அவர் மொசாம்பீக் நாட்டின் மேற்றிராணியாராக அபிஷேகம் பெற்றார். 1898-ம் வருஷம் மயிலாப்பூருக்கு மேற்றிராணியாராக அனுப்பப்பட்டார்.

1899-ம் வருஷம் போர்த்துகால் தேசத்தின் ஒப்போர்த்தோ நகர் மேற்றிராணியாராக தெரிந்துகொள்ளப்பட்டதினால், அவர் மைலாப்பூரை விட்டு, தம் சுயதேசத்துக்குப்போக நேரிட்டது. இப்புது மேற்றிராசனத்தை மெத்த யுக்தி விமரிசையுடன் ஆண்டுவந்தார். அன்பும் அருளும் பொழியும் அவருடைய சுந்தர முகலட்சணமும், அவருடைய கம்பீரதோற்றமும் எல்லோருடைய இருதயங்களையும் கவர்ந்துகொள்ளும். போர்த்துகால் தேசத்தில் புதிதாய் உண்டான குடியரசின் குழப்பம் அவரை மிகவும் துன்புறுத்திற்று. அதனுடைய அநியாயமான கொடிய சட்டத்தினால் தமது மேற்றிராசன மாளிகையைவிட்டு நீக்கப்பட்டதுமன்றி, அவருடைய சொத்து சுதந்தரங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் அவர் தமக்கு நேர்ந்த நெருக்கிடைகளையும், கஷ்டநஷ்டங்களையும் மெத்த பொறுமையுடனும் மன அமைதியுடனும் சகித்துவந்தார். அந்நகர் கிறீஸ்துவர்கள் தங்கள் அன்பார்ந்த மேய்ப்பரை அட்டதாரித்திரத்தில் பரதவிக்க விட்டுவிட சகியாமல், அழகிய மாளிகையொன்றைத் தயாரித்து, அதில் அவர் வந்து வாசம்செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி தமது கடைசி நாட்களை இவ்வில்லத்தில் போக்கினார். இதில்தான் அவர் சென்ற ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று, பரலோக பிராப்தியானார்.

அவர் எழுதிவைத்த மரணசாதனத்தில் அவருடைய களங்கமற்ற ஆத்துமத்தின் குணலட்சணங்கள் பிரதிபிம்பமாய்ப் பிரகாசித்துத் துலங்குகின்றன. அஃது பின்வருமாறு:—

"சர்வேசுரனுடைய கிருபையால் நான் கத்தோலிக்குத் திருச்சபையிற் பிறந்தேன். அச்சபையின் விசுவாசத்திலேயே நான் எப்போதும் சீவித்துவந்தேன். அதிலேயே நான் தேவ கிருபையால் மரிப்பேனென்று நம்பிக்கையாயிருக்கிறேன். சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்ட வேத சத்தியங்களையெல்லாம் பழுதின்றி பாதுகாத்துவரும் சத்திய திருச்சபையின் புறம்பே இரட்சண்ணியம் இல்லையென்று உறுதியாய் விசுவசிக்கிறேன்.

"என் வார்த்தையாலும், கிரியையாலும், அறிந்தும், அறியாமலும், நான் எவருக்காகிலும் மனவருத்தம் கொடுத்திருந்தால் அல்லது துர்மாதிரிகை காட்டியிருந்தால், அவர்களெல்லோரிடத்திலும் மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறேன். என் புறத்தியாரை எப்போதாவது அநீதமாய் நடத்தினேனென்று எனக்கு ஞாபகமில்லை. என்றாலும் எவருக்காகிலும், எவ்விதத்திலாகிலும் நான் நஷ்டம் வருவித்திருந்தால், அவர்களெல்லோரையும் பொறுத்தல் கேட்கிறேன். மனமறிய எனக்குத் தின்மைசெய்தவர்கள் எல்லோருக்கும் சர்வேசுரன் முன்பாக என் முழுமனதுடன் பொறுத்தலளிக்கிறேன். தேவ கிருபை என்பேரில் தயாளமாயிருந்து என் சர்வகுற்றங்களையும், அசட்டைதனங்களையும், பாவங்களையும் மன்னித்தருள, என் ஆத்துமத்துக்காகச் செபங்களையும் திவ்யபூசைகளையும் ஒப்புக்கொடுக்கும்படி எல்லோரையும் மன்றாடுகிறேன். நான் ஏழையாய்ப் பிறந்தேன். ஏழையாய் எப்போதும் சீவித்தேன். நமது பரிசுத்த தாயாகிய திருச்சபையின் ஞான சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து ஏழையாய் மரிக்க ஆசிக்கிறேன். அது காரணமாகத் திருச்சபையின் ஒழுங்குக்கு யாதொரு குறையுமில்லாமல் என் சவ அடக்கச் சடங்குகள் யாவும் மெத்த எளிமையாய் நடத்தப்படவேண்டுமென்று விரும்புகிறேன். அந்திய சடங்கு நிறைவேறும்போது, அதனுடன் பிரசங்கமும் மேற்றிராசன கோவிலில் தவிர வேறெங்கும் செய்யப்படுவது எனக்குப் பிரியமில்லை. அச்சமயத்தில் பிரசங்கம் செய்கிறவர், மேற்றிராணியாரின் அந்தஸ்தையும், குருத்துவ அந்தஸ்தையும்பற்றிய கனமான அரிய பெரிய உத்தரவாதங்களையும் கடமைகளையும் குறித்துமாத்திரம் விரித்துரைப்பாராக. ஏனெனில், பிரசங்கத் தொட்டியை, புகழ்ச்சி கூறுவதற்காகவல்ல, வேத சத்தியங்களைக் கற்றுக்கொடுப்பதற்காகத்தான் உபயோகித்தல்வேண்டும்.

"குடியரசு ஏற்பட்டகாலத்திலிருந்து எனக்காகவாவது, ஏழைகளாயிருக்கும் என் உறவினருக்காகவாவது மேற்றிராசனத்தின் பொருளை நான் செலவு செய்யவில்லையென்று உறுதியாய்க் கூறுகிறேன். தங்கள் ஞான மேய்ப்பரை ஆதரிக்க முன்வந்த உதாரகுணம் படைத்த சில கிறீஸ்துவ சீமான்களுடைய செலவுகளால்தான் சீவித்தேன். என் சௌக்கியத்திலும், அசௌக்கியத்திலும் என் விசாரணைக்கு உட்பட்ட திருச்சபைக்கு இலவசமாய் ஊழியம் செய்துவந்தேன். பரிசுத்த பிதாவாகிய பாப்பானவர் தமது மந்தையின் இச்சிறிய பாகத்துக்கு எனக்குப் பதிலாக, என்னைவிட, யுக்தியிலும், ஆத்தும இரட்சண்ணிய ஆவலிலும், புண்ணியத்திலும் சிறந்தவராகிய மேற்றிராணியாரைத் தந்தருளும்படியாக, அவரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்."

S. M.

---

## HISTORY OF ST. MONICA.
## அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

### 2-ம் அதிகாரம்.

அஞ்ஞானக்குடும்ப சீவியம்—
அர்ச். மோனிக்கம்மாளின் சாந்தமும்
பொறுமையும்—கர்த்தர் அவளை மூன்று
பிள்ளைகளுக்குத் தாயாக்கி
ஆறுதலளிக்கிறார்.

(இரட்சண்யம் 355—369.)

(முன் தொடர்ச்சி.)

அர்ச். மோனிக்கம்மாள் தனது அருமந்த பிள்ளையின்மட்டில் காட்டிய நேசக்கவலையானது, கர்த்தர் அவளுக்கொப்பித்த உந்நத அலுவலின் ஆரம்பமேயாகும். எல்லாவற்றிற்கு மேலாக, அவள் ஜாக்கிரதையுடன் முடிக்கவேண்டியிருந்த அலுவல் என்னவென்றால், அர்ச். அகுஸ்தீனுடைய இளகிய மனசாட்சியை உருப்படுத்தி, அதை நல்வழியில் பயிற்சிசெய்வதேயாம். கொஞ்சத்திற்குள் அவர் தன் தாயின் நேச அரவணைப்பையும் மடியையும் விட்டு நீங்கி, அவளுடைய நற்போதனைகளை மீறி, தன் தகப்பனுடைய பொல்லாத நடத்தையைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கண்டு பாவித்து, சீர்குலையவும், யாவருக்கும் துர்மாதிரிகைக்கு ஏதுகரமாயிருந்த ஜன சங்கத்தில் சேரவும் வேண்டியிருந்தது. ஆதலால், உத்தமமான விதமாய்ப் பக்குவப்படுத்தப்பட்ட மனசாட்சி

யில்லாவிடில், இவ்விதமான ஆபத்துக்களை அபாய மின்றித் தாண்டிப்போவது கூடாதகாரியம்.

இப்படிப்பட்ட மனசாட்சியை அவருக்கு உருப்படுத்தும்படியாக, மோனிக்கம்மாள் சத்திய வேதத்தின் உந்நத சித்தாந்தங்களையும், சுவிசேஷத்தின் நிலைபொருந்திய சோதிப் பிரகாசத்தையும் இடைவிடாமல் அவருக்கு எடுத்துக் காட்டினள்.

தனது முந்தையோரிடமிருந்து தான் அடைந்த பொக்கிஷத்தை யவருக் களிக்கும்படி வருந்தினள். அப்பொக்கிஷமேதெனில், பூலோகத்தையும் அழிந்துபோகும் சகலத்தையும் விழலென்றெண்ணிப் புறக்கணித்துத்தள்ளும் புத்தியேயாம். அவருடைய எண்ணங்களை ஓயாமல் மோட்சபாரிசமாய்த் திருப்பி, அவருடைய ஆத்துமத்தில் வரப்பிரசாதத்திற்காக பள்ளங்களைத் தோண்ட முயன்றாள். அப்பள்ளங்களைக் கடவுளாலன்றி வேறு யாராலும் நிரப்பமுடியாது. அவள் இக்கருமத்தில் எப்படி அநுகூலமடைந்தாளென்று பின்னுக்கு நமக்குத் தெரியவரும். தன் தாயார் படிப்பித்த படிப்பினையின் பலனாக அவர் "ஓ என் தேவனே! நீர் எங்களை உமக்காகச் சிருஷ்டித்தீர். எங்களுடைய இருதயங்கள் எவ்வளவோ கலக்கங்கொண்டிருப்பதினால், உம்மில் இளைப்பாற அவைகளால் கூடவில்லை" என்று ஓலமிட்டுப் புலம்புவார். அவருக்கிருந்த விவேக தீட்சண்யமானது அவருடைய இருதய மயக்கத்தை எப்போதும் தெளிவிக்கும். அவர் துன்மார்க்கத்தில் நடந்துவந்தபோதிலும், அப்போதைக்கப்போது தன் நிலைமையை யுணர்ந்து சன்மார்க்கத்தைத் தேடுவார். இவ்விலட்சணங்கள் அவருடைய ஆத்துமத்திற்கு ஒருவித சோபிதத்தை யுண்டாக்கும். அவருடைய பச்சாத்தாபமும் துயரமும் மேல்கூறிய உந்நத வாக்கியங்களினால் தெரியவருகின்றன.

இப்படிப்பினையை மோனிக்கம்மாள் தினந்தோறும் திருப்பித் திருப்பிப் போதித்துவந்ததினால், அகுஸ்தீனுக்குப் பயனின்றிப் போகவில்லை. இத்தோடேகூட இன்னொருவிதமாயும் தன் மகனுக்குப் போதனை புகட்டிவந்தாள். அது அவருடைய இருதயத்தை உருக்கத்தினால் நிரப்பும். கடவுள் எவ்வளவு நேசமுள்ளவரென்றும், அந்நேசத்தின் முகாந்தரமாய் "அவர் மோட்சத்தைவிட்டு இறங்கி" நிர்ப்பாக்கிய மனுரூபங் கொண்டு பச்சைக்குழந்தையாய் வைக்கோலின் மேல் படுத்துக்கிடந்ததையும், கடைசியாய்த் தம திரத்தமெல்லாம் ஒரு துளிமுதலாய் விடாமல் சிந்தி, இரு பாதகர் நடுவில் சிலுவைமரத்தில் மரித்து உயிர்விட்டதையும் ஓயாமல் எடுத்துக்காட்டுவாள். மேலும் நாம் அவருடைய நேசப்பெருக்கத்தைச் சிந்தித்துணர்ந்து, முழு இருதயத்தோடு அவரை நேசிக்கும்படியாகவே இவ்விதமான வாதனைகளை யநுபவிக்கச் சித்தங் கொண்டார் என்று சொல்லுவாள். இவ்வர்ச்சியசிஷ்ட தாயானவள், தேவநேசத்தினால் தூண்டப்பட்டு, அன்பும் உருக்கமும் நிறைந்த அகுஸ்தீனுடைய இருதயத்தில் விதைத்த நற்போதனை என்னும் வித்தானது, எப்படிப்பட்ட பலனைத் தரும் வித்தாயிருந்திருக்குமென்று நாமே கிரகித்துக்கொள்ளலாம். அவளுடைய வார்த்தைகள் அவருடைய மனதில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்ததென்றால், அவர் பாவச்சேற்றில் அமிழ்ந்தி வாலிபப் பிராயத்தின் ஆசாபாசக்கட்டுகளில் சிக்கியிருக்கும்போதுமுதலாய், "நமது ஆங்காரத்தைத் தாழ்ச்சியினால் வெல்ல, 'கர்த்தர் வானலோகத்திலிருந்து இறங்கிவந்தார்'" என்னும் உந்நத வார்த்தைகளை அவரால் மறக்க முடியவில்லை.

ஒரு புஸ்தகம் எவ்வளவுதான் இலக்கியத்தோடும் வாக்கலங்காரத்தோடும் எழுதப்பட்டிருந்தபோதிலும், அதில் சேசுக்கிறீஸ்துநாதரின் திவ்ய நாமதேயத்தைக் காணாவிட்டால், "சீ, சீ, இதென்ன புஸ்தக"மென்று உடனே அருவருப்புடன் அதனை விசிறிப்போடுவார். இவ்விஷயத்தைச் சரிதை போகப் போகக் காண்போம்.

மோனிக்கம்மாள் தன் குமாரனுடைய இருதயத்தில் தேவ நேசத்தைப் பிறப்பிக்குமுன், பாவத்தின்மட்டில் அரோசிகமும், இருதயத்தை மாசுபடுத்தி அதனை இழிவுபடுத்தும் சகலத்தின் மட்டில் வெறுப்பும், அவருக்குண்டுபண்ண வருந்துவாள். நல்ல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஆத்தும நஷ்டத்திலிருந்து பாதுகாத்துவர வேண்டி, எவ்விதமான கஷ்டத்திற்கும் அஞ்சாமல், தாங்கள் சின்னஞ் சிறுவர்களாயிருக்கும்போது கட்டிக்கொண்ட தோஷங்களையும், அவைகளுக்குண்டான காரணங்களையும், அவைகளை விலக்கி நல்வழிக்கு வந்த விதத்தையும், அப்பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டி அப்படிப்பட்ட தோஷங்களில் அவர்கள் தவறிவிழாதபடி அவர்களை எச்சரித்துவருவதுபோல, இவளும் செய்வாள். தான் சிறுமியாயிருக்கும்போது திராட்சரச அறைக்குப்போய் சிறு பாத்திரத்

தில் திராட்ச ரசத்தை ஊற்றிக் குடித்ததையும், நாளாவட்டத்தில் உருசிமிஞ்சி அதிகமாய்க் குடிக்கத் தலைப்பட்டதையும், அதனால் தனக்கு நேர்ந்த அவமானத்தையும், விசேஷமாய் அவருக் கெடுத்துச் சொல்லுவார். இதனை வெளிப்படுத்துவதினால், தனக்கு மானநஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. ஆனால் தன் மகன் தீமையைக் கண்டு விலகி, அற்ப சொற்பக் குற்றங்கள்மட்டில் முதலாய் அச்சமும் வெறுப்புங்கொண்டால், அதுவே தனக்குப் பாக்கியம் என்றெண்ணுவாள்.

மோனிக்கம்மாள் அவரைத் தன் மடியில் அருமையுடன் உட்காரவைத்துக்கொண்டு, இவ்விதமாக பூலோக காரியங்களின் அநித்தியத்தைப்பற்றியும், மட்டில்லா தேவ நேசத்தைப் பற்றியும், பாவத்தின் அவலட்சணகோரத்தைப் பற்றியும் அவருடன் அடிக்கடி பேசி, கொஞ்சங் கொஞ்சமாய் அவரது ஆத்துமத்தைப் பரிபக்குவப்படுத்தி, அவருக்கு உத்தமமான மனசாட்சியை உண்டுபண்ணினாள். அவர் ஓர் அற்ப தீமையைச் செய்தால், உடனே இந்த மனசாட்சி அவரைக் கண்டித்து வாதிக்கும். தான் நிர்ப்பாக்கியனாயிருந்தாலும் பரவாயில்லை. மனதுமாத்திரம் சுத்தமுள்ளதாயிருந்து, அதில் சமாதானம் குடிகொண்டிருந்தால், அதுவே தனக்குப் போதும் என்று அவர் மனசாட்சி அவருக்கு வற்புறுத்திச்சொல்லும். அதன் சொல்லை யவர் அசட்டைசெய்து அதன் கண்டனைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயலுவார். ஆனால் வேடனானவன் தொடுத்து எய்த அம்பானது, மானின் வயிற்றில் ஊடுருவிப் பாய்ந்து அதின் தேக ஆதியந்தம் நோயை உண்டாக்குவதுபோல், அவர் ஒரு பாவத்தைக் கட்டிக்கொண்ட பிறகு, அவர் எங்கே போனாலும், என்னத்தைச் செய்தாலும் அவர் மனசாட்சி அவரை ஓயாமல் கண்டித்து "நீ செய்தது பாவம், தேவனுக்கடாத துரோகம்" என்று அவரை வாதித்துக்கொண்டு வந்தது. கடைசியாய் அவர் இவ்வாதனையைப் பொறுக்கமாட்டாமல், தன் பாவக்கிருத்தியங்களைப்பற்றிப் பூரண மனஸ்தாபப்பட்டுச் சிறுவத்தில் தன் தாயார் தனக்குச் சொல்லிக்காட்டியபடி கடவுளிடம் ஊதாரிப்பிள்ளையைப்போல் திரும்பி வந்து, அவருடைய பாதாரவிந்தத்தில் விழுந்து, "தகப்பனே, என் ஆத்துமத்தின் மாட்சிமையை எனக்குக் காட்டி, என்னைக் கற்புள்ளவனாக்கி, எனக்கு மனோ சமாதானத்தையும், ஞான சந்தோஷத்தையும் அளித்தருளும்" என்று மன்றாடுவார்.

பத்ரீஷியூஸ் அவவிசுவாசியாயும், துன்மார்க்கனுமிருந்தபோதிலும், விசுவாசத்தின் உணர்ச்சிகள் அவனுடைய ஆத்துமத்தில் எவ்வளவு ஊர்ஜிதமாய் நாட்டப்பட்டிருந்தனவென்றும், அர்ச். மோனிக்கம்மாள் அவ்வளவு பக்தியும் விவேகமுமுள்ளவளாயிருந்தும், அவளுடைய நிலைமை எப்படிப்பட்டதாயிருந்ததென்றும், அகுஸ்தீனுடைய பால்ய பருவத்தில் நடந்த ஒரு சம்பவம் நமக்குக் காட்டுகிறது.

அர்ச். அகுஸ்தீன் "சங்கீர்த்தனம்" என்னும் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சில வாக்கியங்கள் மேற்கண்ட விஷயங்களைத் துலக்கமாய்க் காட்டுகின்றன. அதாவது: "நான் இன்னும் குழந்தையாயிருக்கும்போது, ஒரு நாள் திடிரென்று எனக்குக் கடினமான வயிற்றுவலி கண்டதால், நான் செத்துப்போவேனென்று நினைத்தார்கள். அந்த நிலைமையிலிருக்கும்போது, என் தேவனே! என்றும்எனக்காதரவாயிருக்கும்திவ்ய கடவுளே! என் இரட்சகரும் உமது திவ்ய சுதனுமாகிய சேசுக்கிறீஸ்துநாதர்பேரால், ஞானஸ்நானம் பெற எவ்வளவு விசுவாசத்தோடும் ஆவலோடும் கோரினேனென்று உமக்குத் தெரியுமே. என் தாயாரை மன்றாடினேன். என் தாயாகிய திருச்சபையையும் கெஞ்சினேன். சீக்கிரமாய் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அவர்களைப் பிரார்த்தித்துக்கொண்டேன்" என்பதே.

ஏழெட்டு வயதுள்ள இச்சிறு பிள்ளையாண்டான் கடின வியாதியாய் மரணத்தறுவாயிலிருக்கும்போது, வேறெதையும்சிந்தியாமல் கடவுளைப்பற்றியும், தன் ஆத்துமத்தைப்பற்றியும் நித்தியத்தில் நல்லவர்களுக்குக் கிடைக்கும் மோட்சப்பேற்றைப்பற்றியும், பொல்லாதவர்களுக்குக் கிடைக்கும் நரகாக்கினையைப்பற்றியுமே நினைவாயிருப்பது, என்ன அதிசயம்! இந்தச் சந்தர்ப்பத்தில், தாயார் நடந்துகொண்ட விதம் அதிசயமுள்ளதாயிருக்கிறது. அவ்விஷயமாய் அர்ச். அகுஸ்தீன் சொல்வது "என் தாயார் வியாகுலப் பெருக்கத்தில் அமிழ்ந்திப்போயிருந்தாள். ஏன்? அவ்வளவாய் அவள் துக்கிக்கக் காரணமென்ன? தன் மகன் செத்துப்போவானென்னும் பயமோ? சந்தேகமின்றி, 'அவளுக்குப் பயமிருந்ததுதான். அவள் பிள்ளையைப்பெற்ற தாயல்லவா? ஆனால் என் கர்த்தாவே, நான் பிழைக்கவேண்டுமென்று அவள் கொண்டிருந்த ஆவலைவிட, என் ஆத்துமம் மோட்சானந்தப் பேறடையவேண்டுமென்னும் ஆவலையே அதிகமாய்க்கொண்டிருந்தாள்

என்பதை நீர் அறிவீர். நித்திய சீவியத்திற்கு உடந்தையாக்கும் ஞானஸ்நானத்தைப் பெற்று, நான் ஞானப்பிறப்பை யடையவேண்டுமென்று, அவளது தூய இருதயம் அத்தியந்த ஆவலுடன் ஆசித்தது. ஆதலால் என் இரட்சகராகிய சேசுவே! நான் உம்மை என் தேவனாக அங்கீகரித்து, என் குழந்தைப் பருவத்தில் நான் கட்டிக்கொண்ட தோஷங்களிலிருந்து சுத்திகரமடைய ஞானஸ்நானம் பெறவேண்டுமேயென்று அலறிப்பதறி யழுதாள்."

இச்சமயத்தில் தாயும் பிள்ளையும் இவ்வளவு உற்சாகத்துடன் ஞான ஆவல்கொண்டிருந்தும், பின்னிட்டு நிகழ்ந்த சம்பவத்தை அர்ச். அகுஸ்தீன் சொல்லக்கேட்பது அதிசயமாயிருக்கின்றது. அவர் சொல்வது "இதனிடையில் என் வயிற்றுவலி தொலைந்தது. நான் சாவேனென்கிற பயம் இல்லையென்று என் பெற்றோர் கண்டபோது, எனக்கு ஞானஸ்நானம் கொடுப்பிக்க வேண்டுமென்னும் எண்ணத்தை விட்டுவிட்டார்கள்." மெய்யாகவே இது கழிந்து 20-வருஷம் வரைக்கும் அர்ச். அகுஸ்தீன் ஞானஸ்நானம் பெறவில்லை.

அப்படியும் உண்டாவென்று நாம் அதிசயப்படவேண்டியிருக்கும். காரணம் இன்னதென்று அர்ச். அகுஸ்தீன் எடுத்துக்காட்டாதபோதிலும், பத்ரீஷியூஸாலேயே இவருடைய ஞானஸ்நானம் தடைபட்டது. அர்ச். அகுஸ்தீன் மரண அபாயத்தில் இருக்கும்போது, அவர் ஞானதீட்சை பெறும் விஷயத்தில், மோனிக்கம்மாள் தன் இஷ்டப்படி நடந்துகொள்ள அநுமதி தந்திருந்தான். வேதத்தின்மட்டில் அவனுக்குப் பற்றுதல் என்னவோ கிடையாது. ஆனால் அவன் கொஞ்சம் இளகின நெஞ்சுள்ளவன். மரணப் படுக்கையிலிருக்கும் தன் புத்திரனுக்கு வேத விஷயத்தில் மனச் சுதந்தரத்தைக் கொடுக்காமல்போனால், எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பதுபோல், பிள்ளையின் வியாதியைப்பற்றி இப்போதே துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருக்கும் தாயா ரிருதயத்தை வியாகுலவாளா லூடுருவுவதற்குச் சமானமென்று சிந்தித்து கொஞ்சம் அஞ்சினன். ஏனெனில், என் மகன் ஞானஸ்நானமின்றி மரிக்கும்பட்சத்தில் இரட்சணியப்பேறின்றி சதாகாலம் நரக நெருப்பில் நிர்ப்பாக்கியத்திலிருக்கவேண்டி யிருக்குமென்று, அவள் அலறிப்பதறியழுவதை யவன் அநுதினமும் கண்கூடாய்ப் பார்த்துவந்தானன்றே? ஆனால் அர்ச். அகுஸ்தீனுக்கு மரண ஆபத்து நீங்கியதும், அவன் தன் அஞ்ஞான புத்தியைக்காட்டி நிதானமாய் ஞானஸ்நானம் கொடுக்கலாம், இப்போதென்ன அவசரம் என்று சொல்லிவிட்டான். கூடாது, ஞானஸ்நானத்திற்கு இதே சமயமென்று அர்ச். மோனிக்கம்மாளும் ஒரே பிடிவாதமாய் நிற்கவில்லை.

ஏனெனில், பத்ரீஷியூஸ் குணத்தையொத்தவனிடம் பிடிவாதம்செய்வது நல்லதல்ல. பிள்ளைகள் பெரியவர்களானபிறகு அவர்களுக்கு நிதானமாய் ஞானஸ்நானம் கொடுக்கலாமென்று திருச்சபையும் அநுமதி யளித்திருந்தது. ஆதலால் அவள் என்ன செய்வதென்று தெரியாமல், தன்னைத் தேவ திருவுளத்திற்கு ஒப்புக்கொடுத்து மவுனமாயிருந்துவிட்டாள். மேலும் அர்ச். அகுஸ்தீன் நடமாடவேண்டியிருந்த ஜன சங்கமும், போகவேண்டியிருந்த பள்ளிக்கூடங்களும், வாசிக்கவேண்டியிருந்த புஸ்தகங்களும், அக்காலத்தி லாடப்பட்டுவந்த நாடகங்களும், மற்ற ஆட்ட பாட்டங்களும் எல்லாம் துன்மார்க்கத்தையே நாடியிருந்தமையால், அவைகளின் தீமைகளிலிருந்து அவருடைய மனதையும் இருதயத்தையும் மாசின்றிக் காப்பாற்றிவைப்பது முற்றிலும் கூடாதகாரியம். ஜன சங்கம் அக்காலத்தில் அப்பேர்க்கொத்த கேடுகெட்ட நிலைமையிலிருந்தபடியால், சில காலத்திற்குமுன் அர்ச். அந்தோனியார் செய்ததுபோல், ஒரு வாலிபன் எந்த இலௌகீக படிப்பையும் படிக்காமல் உலக சஞ்சாரத்தை விட்டு வன சஞ்சாரத்தை நாடிப் போனால்மாத்திரம், சோதனைகளுக் குட்படாமல் அவைகளை ஜெயிக்கக்கூடுமாயிருக்கும். மேலும் ஞானஸ்நானத்திற்குப் பிறகு, செய்யும் பாவங்கள் பெரும் பாவங்களென்றும், உண்டாகும் சோதனைகள் பலத்த சோதனைகளென்றும், ஆத்துமத்தை மாசுபடுத்தும் பாவக் கறைகள் சீக்கிரத்தில் அழித்தெடுக்க அரிதான பெருங் கறைகளென்றும், அர்ச். சின்னப்பர் திருவுளம்பற்றியிருப்பதைக் கிறீஸ்துவத் தாய்மார்கள் கேட்டு நடுநடுக்கங்கொள்ளவேண்டியிருக்கும்போது ஞானஸ்நானம் கொடுக்க அவசரப்படுவதேன்? அர்ச். அகுஸ்தீன் சில சமயம் நெறிதவறி நடந்து, பிறகு சன்மார்க்கத்தை நாடிவரும்போது இந்தச் சர்வசக்தியுள்ள வரப்பிரசாதத்தை யவருக்களிப்பது நல்லதல்லவா? ஆதலால் தற்காலம் அவருக்கு ஞானஸ்நானங் கொடுக்கத் தப்பிப்போனபோதிலும் பரவாயில்லையென்று தைரியமாயிருந்

தாள். அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "என் தாயார் இதையெல்லாம் சிந்தித்து எப்படிப்பட்ட சோதனைகள் எனக்குண்டாகுமென்றும், சமுத்திரம் கொந்தளித்து வெள்ளம் பெருகிக் கற்பாறையின்மேல் மோதுவதற்குச் சமானமாய் அச்சோதனைகள் எப்படித்தாக்குமென்றும் அவள் அறிந்து, நான் ஞானஸ்நானத்தைப் பெற்று கிறீஸ்துநாதரின் ஞானசாயலை யடைந்திருக்கும் என் ஆத்துமத்தைப் பாவத்திற்கும் தோஷத்திற்கும் ஒப்புவிப்பதைவிட, ஞானசாயலை யடையாமல் இன்னும் ஜென்மப் பாவதோஷத்திலிருக்கும் அவ்வாத்துமத்தை அப்பாவாக்கிரமங்களுக்கு ஒப்புவிப்பது தாவிலையென் றெண்ணினுள்."

தனது புருஷனின் கட்டளைக்குப் பணிந்து, ஆபத்துக்குரிய இத்தீர்மானத்திற்கு ஒருவாறு தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டாலும், தன் மகனின் ஆத்தும விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பது தன்னைச் சார்ந்த விசேஷமான கடமையென்று உணர்ந்தாள். அவருக்கிப்போது நேர்ந்த அபாயத்தைக்கண்டு எச்சரிப்படைந்து, அவரிடம் விளங்கிய ஞான சோதிப் பிரபையைக்கண்டு மகிழ்ந்து, தைரியங்கொண்டு, தன் ஜீவியத்தில் ஒரு நிமிஷத்தையாவது வியர்த்தமாய்க் கழிக்கத்தகாதென்று தீர்மானித்தாள். துயரத்திற்கும் துன்பத்திற்கும் ஆஸ்பதமாயிருக்கும் உலக சந்தோஷங்களை மேலும் மேலும் வெறுத்துத்தள்ளி, தன் மகனுக்கு ஒரு காவல் சம்மனசுபோலிருந்து, தேவ திருவுளத்தின் பாதையில் அவரை நடத்திவந்தாள். இந்த ஒரு விஷயத்தில்மாத்திரம் அவள் கண்ணுங்கருத்துமாயிருந்தாளென்பதல்ல. தனது குமாரன் சத்திய வேதத்தைத் தழுவி உத்தம நெறியில் ஒழுகிவர வேண்டுமென்று, தான் தொடுத்த உந்நத அலுவலைத் தொடர்ந்து நடத்திவருவதில், தனக்கு யாரும் தடையாயிராதபடி தன் சாந்த குணத்தினுலும் பொறுமையினுலும் அமரிக்கையினுலும், தன் அஞ்ஞானப் புருஷன், மாமியார், உறவின் முறையார் ஊழியர் முதலியவர்களைத் தன் வசப்படுத்திக்கொள்ளவும், தன் காரியம் சித்தியடைவதில் அவர்களைத் துணைவர்களாக உபயோகித்துக்கொள்ளவும், முன்னைவிட அதிகமாய் வருந்துவாள்.

தன் கருத்து கைகூடும்படி, முதலில் தன் மாமியாரை வசப்படுத்திக்கொண்டாள். இவள் மகா கர்வி. பிறரைப் பழித்துப் பேசும் குணமுடையவள். தன் கைக்கீழ்ப்பட்டவர்களை நெருக்கிவாட்டும் கொடிய நெஞ்சத்தாள். "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற்சாதல்—அறங்கூறு மார்க்கந்தரும்" என்பதை அலட்சியஞ் செய்து அவளுடைய ஊழியர்கள் மோனிக்கம்மாளின்பேரில் இல்லாததும் பொல்லாததும் அவளிடம் புறங்கூறிவந்தபடியால், மோனிக்கம்மாளென்ருல் அவளுக்கு எட்டிக்கசப்பாயிருக்கும். "மாமியார் மெச்சிய மருமகளில்லை."

(இன்னும் வரும்.)

## DUTIES OF A WIFE.

## செல்வியர் நியதி.

(மனைவியின் கடமைகள்.)

(*All Rights Reserved.*)

(முன் தொடர்ச்சி.)

71 வேட்டோனைத் தேடி – விருந்தினர் வந்தால்
ஓட்டிட வெண்ணி – உரக்கக் கூவி
தேட்டாளன் தன்னை – திட்டுவாள் பேச்சுகள்
நீட்டுவாள் பிணங்கி – நிலமிசை படுப்பாள்
காட்டுவாள் மாயம் – கனத்த தலைநோய்
நீட்டுடல் வலிமிகத் – தேங்கிற் றென்பாள்
சாட்டியிங்கேசுவாள் – தம்மக்களையே
வீட்டகம் வந்தோர் – வெளியே கிடவே
போட்டிப் பெண்டிர் – புரியும் தொழிலே.

72 தெய்வமஞ்சித் – திருட்டுக் கெடுமனம்
பொய்வஞ்சகமும் – புனைசுருட்டெல்லாம்
தையலர் தமக்குத் – தகாதிவையென்று
வையகமீது – மறந்திடல்வேண்டும்.

73 பெண்டீர் ஓய்ந்தால் – பேசப் புழுங்க
அண்டை அயலில் – அடிக்கடி போதல்
கண்ட துர்க்குணம் – கலத்தலன்றி
சண்டை முதலிய – சச்சர வுறுவதால்
வண்டு விழியர்க்கு – வழுவாகும்மே.

74 வேலை யொழிந்த – வேளை வீண்பேச்சை
சால வொழித்து – தையல் வாசகம்
தாலமேல் செபமும் – தவமும் தியானம்
ஏல வியற்றி – இருத்தல் அழகே.

75 பெண்கல்வி நவீன – பிரபல முறைக்க
மண்ணுல கதனில் – மகிமை பெறவே
மேற்குக் கல்வி – மிகு நாகரீகம்
எற்கும் கருத்தால் – இங்கிலீஷ் பாஷை

பேசப் படிக்க – பிழையற வெழுத
பாசமாய்க் கற்றுப் – பறங்கியைப் பழகுவார்.

76 பழகினபொழுது – பான்மை வேறாகும்
அழகுடன் நிலவ – ஆடவர் மகிழ
வெள்ளை யுடையும் – விளங்கு
[கைக்குடையும்
சள்ளையில்லாத – தனியுலாவலுமே,
மெள்ளக்கொண்டு – மீறுவார் அடக்கம்.

77 அடக்கமென்ப – தணுவளவின்றி
நடக்கக் குலுக்கி – நகைமுகங் காட்ட
வாலிபர் நாளும் – வந்துறவாட
நாலு குணமும் – நாடா தொளிக்கும்.

78 வாசிப்ப தாங்கில – வாலர்கள் 1 'நாவல்'
2 நேசக் கதைகள் – நிகழ்த்து துர்க்குணமே
ஆங்கில கல்வியால் – அடைந்த பெருமை
ஈங்கிவை யென்றே – இசழ்கிறார்
[பெரியோர்.

79 வியன்பெரு முலகம் – விரும்புவ துன்னில்
நயமுறும் புதல்வி – நல்லதோர் மனைவி
ஜெயமுறும் தாயும் – செய்மனையாட்டியும்
பயனுறும் குணவதி – பாரிலிவ் வைந்து
செயல்தருங் கல்வி – சீருடைத் தென்ப.

80 பெண்கட் கவசியப் – பிரதம கல்வி
எண்ணும் எழுத்தும் – எழிலுறக் கற்றபின்
மண்ணிலிவ் வைந்து – மாண்புறுங் கலையே
பண்ணிசை வாச்சியம் – பயிலலும் பின்னே.

81 சொந்த வீட்டைத் – துறந்த பின்பு
தந்தை தாயார் – தாமிவரென்று
மாமன் மாமி – மகிழும்படிக்கு
பூமிக்குள்ள – பொறுமை தாங்கி
அன்புவைத்திங் – காதரித்தால்
இன்புதல்வியினல் – இரக்கமே கொள்வார்.

82 கண்டித வேதக் – கட்டளை கடந்த
பண்டைய வழக்கம் – பழங்குருட்டாட்டம்
பெண்டுகளொழிக்கப் – பிரயாசப்பட்டால்
திண்டிறவோடு – சீக்கிரம் முடியும்.

83 சாவு வாழ்வில் – சாஸ்திரம் சகுனம்
மேவு மிந்து – வேத வழக்கம்
யாவுந் தள்ளி – எம்பிரான் களிக்க
ஆவுவீண் செலவையும் – அடியொடு
[தொலைத்து
தாவும் அவசியத் – தப்பிலாச் செயலே.

84 செலவைச் சுருக்கிச் – சீட்டு போட்டு
நலமுறுங் கணவனை – நலியவைத்து
கலனுடை சேர்க்கக் – கருதும் பெண்டிர்
தலமிசை பதியைச் – சடுதியி லிழப்பாள்.

(இன்னும் வரும்.)

*M. P. Ml.*

1 கதைப் புத்தகம்—Novel.
2 Love Story.

## JEYACEELI'S TREASURE.
## ஜெயசீலியின் பொக்கிஷம்.

(முன் தொடர்ச்சி.)

அச்சமயம் தோட்டக்காரன் ஓடிவந்து "அம்மா! யாரோ ஒரு அம்மாள் வாசற்படியிலிருக்கிறார்கள்; உங்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்" என்று சொல்லி, நீலகண்டன் தாயாரிடமிருந்து பதில் பெற்றுக்கொள்வதற்குள்ளாக அந்த அன்னிய ஸ்திரீயும் உள்ளேவந்து நேராக நர்ஸை நோக்கிச் சொன்னதாவது:—

"ஜெயசீலி! நீ இவ்விடத்தில் உனது சிநேகிதர்களுடன் இந்தச் சாயங்காலத்தைச் சந்தோஷகரமாய்க் கழிக்கிறாய்போலிருக்கிறது. நான் அதைக் கெடுக்கவந்துவிட்டேன்; என்னை மன்னிக்கவேண்டும்" என, ஜெயசீலி தனது கண்ணை எறெடுத்துப்பார்த்து "ஆகா! மங்களம், நீதானா? வா, வா; வந்து உட்காரு. உன்னைப் பார்க்கிறது எனக்கு இன்றைக்கு எவ்வளவோ அதிர்ஷ்டம்! எவ்வளவோ பாக்கியம்! எவ்வளவோ சந்தோஷம்! இந்த நாளானது இங்கே இருக்கப்பட்ட யாவருக்கும் சுபதினமாகவே இருக்கிறது. உனக்கும் அப்படியே சந்தோஷ நாளாக இருக்கக்கடவது. தயவுசெய்து உட்காரு" என்று தாம்பாளத் தட்டை எடுத்து எதிரேவைத்து "இதோ, பக்ஷணம் கொஞ்சம் சாப்பிட்டுத் தேத்தண்ணீர் பருகு. ஏது, நீ சென்னப்பட்டணத்திலிருந்து வருகிறாய்போலிருக்கிறது?" என்னவும்,

மங்களமரி ஜெயசீலியைப் பார்த்து: "நான் நேற்றிரவு பயங்கரமான கெட்ட கனவு ஒன்று கண்டு, அதனால் அதிக சங்கடத்துக்குள்ளாகி குழப்பத்திலிருந்தேன். எனது உற்ற சிநேகிதி

யும் சகோதரியுமாகிய உன்னைப் பார்க்கிறவரையிலும் என் மனத் தத்தளிப்பு தணியவில்லை. ஆகையால், உடனே உன் இருப்பிடத்தைத் தேடி வந்தேன்" என்றாள். "ஆ! உண்மையாகவே அந்தக் கெட்ட பயங்கரங்களுக்கும் துக்கங்களுக்கும் பதிலாக போதுமான சந்தோஷமும் ஆச்சரியமுமிருக்கின்றது. எனது பக்ஷமுள்ள சகோதரியே! நான் பாக்கியமாயிருக்கிறதற்கு ஞாயமிருக்கிறது. நான் எனது பெற்றோரையும் சகோதரன் சகோதரியையும் இன்றையத்தினம் கண்டுபிடித்தேன்! என் தகப்பனார் எனக்கு யாதோ கொஞ்சம் ஆஸ்தி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது. அதில் எனக்குற்ற சகோதரியாகிய உனக்கும் கொஞ்சம் பங்குகிடைக்குமென்பதற் கையமில்லை.

"மற்ற விவரங்கள்யாவையும் இன்னும் சற்று நேரத்திற்குள்ளாக அறிவாய். சரி, நீ வெயிலில் நடந்துவந்திருக்கிறதினால் அதிக களைப்பாகத் தோற்றுகிறாய். இந்தப் பக்ஷணங்களைச் சாப்பிட்டு கொஞ்சம் தேத் தண்ணீர் குடி" என்று பக்ஷத்துடன் சொன்னாள். சற்று நேரம் எல்லோரும் கலந்துபேசி முடியுமுன்னே சூரியன் அஸ்தமிக்க, இருள் திரைவந்து மூடிற்று. எல்லோரும் எழுந்து அப்பொழிலை விட்டகன்று நீலகண்டன் விடுதியில் தங்கியிருந்தனர்.

அன்றிரவு எல்லோரும் இரவமுதுண்டு, தாம்பூலம் தரித்து, மேல்மாடியில் காற்றிற்கு நிலவு வெளிச்சத்தில் உல்லாசமாய் உட்கார்ந்து கொண்டிருக்கையில், தங்கம்மாள், ஜெயசீலியைப் பார்த்து "என் பிரிய மகளே, 14-ஆண்டு வரையிலும் மடத்திலிருந்த நீ அதினின்று வெளிப்பட்ட காரணமென்ன?" எனக் கேட்கவும், ஜெயசீலி சொல்லுகிறாள் :—"எனதன்பிற்குரிய அன்னையே, உங்களுக்குச் சொல்லாமல் ஒளிக்கும் இரகசியமுமுள்ளதோ? சொல்லுகிறேன் கேளுங்கள்."

"நீங்களோ 14-வது வருஷம் வழக்கமாய் எனது சம்ரக்ஷணைக்காக அனுப்பிக்கொண்டிருந்த தொகையை திடீரென்று நிறுத்திவிட்டீர்கள். மடத்து முதலாளியம்மாள் அதன்பின் மூன்று மாதமளவாகப் பணமேனும், கடிதமேனும் வருமென்று எதிர்பார்த்தும் யாதொன்றும் வாராததினால், இவ்விஷயத்தைப்பற்றி மற்ற கன்னியாஸ்திரிகளிடம் சொல்லி யோசனை கேட்டதின்மேல், எனது குணம், நடத்தை, கல்விமுதலிய விஷயங்களைக் கவனித்து என்னை வீட்டிற்கனுப்பிவிட மனமில்லாமல், தங்களுக்கு அதிக உபயோகமாயிருப்பேனென்றெண்ணி, என்னை அங்கேயே நிறுத்திக்கொள்ளத் தயைசெய்தார்கள். ஆயினும் என்ன! இதுகாறும் இல்லாத கஷ்டத்தை யுண்டாக்கிவிட்டார்கள். நான் மடத்திற்குப் போன நாளாய், படிப்பதும், தைப்பதும், விளையாடுவதும், கோவிலுக்குப் போவதும், ஜெபம் பண்ணுவதுமே தவிர, வேறு வேலை செய்தறியேன். இப்போது நவமாய் நெல் குத்தவும், மிளகாய் சாந்து அரைக்கவும், அடுப்பெரிக்கவும், பதார்த்தங்கள் சமைக்கவும்; மண் பாண்டங்கள், செம்பு, பித்தளை சாமான்கள் முதலியவைகளைத் துலக்கவும், இவைமுதலிய கஷ்டமான வேலைகளைச் செய்யவும் எனக்குக் கட்டளையிட்டார்கள். இவற்றைச் செய்கையில், ஒவ்வொரு வேளையில், நான் அனுபவித்த வருத்தமும், துக்கமும், என்னைப் பெற்று வளர்த்து, இக்கதிக்காளாக்கின தாய் தந்தையரை நினைத்து நான் அழுத கண்ணீரும், சிந்திய மூக்குமாயிருந்த மேரையும் எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் பரம கடவுளுக்கேயன்றி மற்றொருவருக்கும் தெரியவராது. இவைகளையெல்லாம் நான் எவ்வளவோ மனம் பொறுத்து சேசுவினிருதயத்திற்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்துவிட்டு, எவரிடத்தும் முகமலர்ச்சியாய்த் தோன்றுவேன். இவ்வாறு சில காலம் கழிய, இதற்குமேற்பட்ட துயரமொன்று சம்பவித்து என்னை உருக்குலையச்செய்தது. அஃது யாதெனிலோ, எனது எழாவது பிராயமுதல், எனது கற்பைச் சேசுநாதரிட மொப்பித்து, நான் கன்னியாஸ்திரியாகவேயிருந்து, அவருக்கே மணவாளியாவேனென்று மிகுந்த ஆசைகொண்டு, அவர் நிமித்தம் எவ்வித் துன்பத்தையும் சகித்து வந்திருக்க, தலைமேலே மலைவிழுந்தாற்போல் எனது சந்தேகப் பிறப்பைப்பற்றி எனக்குக் கன்னியாஸ்திரி பட்டந் தரக்கூடாதென்று இவர்களுக்குள் பேசிக்கொண்டது என் செவிக்கேறப்பெற்று, நான் ஆறாத் துக்கத்திலாழ்ந்து, ஊணுறக்கமற்று, நாளுக்கு நாள் தேகமிளைத்து மெலிவுற்று, வியாதிப்பட்டு, ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படலானேன். இங்கு ஒரு மாதகாலம் வரையில் எனக்கு வியாதி குணப்படாமல், நாளுக்கு நாள் பலத்துவருவதைக் கண்டு, வாரந்தோறும் வந்து பார்வையிட்டு விசாரித்துப்போகும் கன்னியாஸ்திரிகள் ஒரு மாதங் கழிந்தபின், யாதுகாரணத்தாலோ வாராதொழிந்தனர். இவ்

வாறு யாவராலுங் கைவிடப்பட்டேனெனினும், எவ்வுயிருங் காக்குமவ் வீசன் என்னைக் கைவிடுவாரோ வென்ன? அடுத்த மாதத்துக்குள் என் வியாதி நீங்க எனக்குப் படிப்படியாய் சுகமுண்டாகி, அந்த மாதக் கடைசியில் நான் பூரண சுகம் எய்தலானேன். இதன் மத்தியில் என்னை இராப் பகல் நித்திரையின்றிப் பாதுகாத்து மணி நேரத்துக்கு மணிநேரம் மருந்தும், சூப்பும், கஞ்சியும் கொடுத்து, எந்நேரமும் என்னருகிலிருந்து ஆறுதல் சொல்லிவந்த அந்த (நர்ஸ்) உபமாதாவைப்பற்றி ஓரிரவு சற்று யோசித்துப்பார்க்கலானேன். இவள் கூலிக்கு வேலைசெய்பவள் போல் அல்லாது, என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கு மேலாக, நான் எப்போது சுகப்படுவேனோ வென்று ஏங்கி அங்கலாய்த்து, எனக்கு வேண்டுவனயாவும் தருணமறிந் துதவி, ஆறுதலான வார்த்தைகளை என் னருகிருந் துரைத்து எவ்வளவோ பட்சமாய்ப் பார்த்துவந்தாள். இதனால், 'இப்படிப்பட்டவர்களுக்குக் கடவுள் ஏராளமான கிருபைபொழிந்து பலனருளுவாரன்றோ? ஆதலின், இவ்விதத் தொழில் நாமும் புரிதலே தகுதி' எனத் தீர்மானித்து, நான் வெளிப்பட உத்தரவளித்த டாக்டரைப் பார்த்து, 'ஐயா, இந்த நர்ஸ் வேலையால் அதிக புனிதமும், புண்ணியமும் உண்டாகிறதை நன்குணர்ந்தேனாதலின், யானும் நர்ஸ் வேலைசெய்ய ஆசைப்படுகிறேன்' என்று சொல்லவே, அவர் என்னை எழும்பூர் மாதர்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். அங்கு ஒரு வருஷம் வேலைபயின்று, திரும்பி ஜெனரல் ஆஸ்பத்திரிக்கே வந்து சேர்ந்து, அவ்விடத்தில் ஒரு வருஷகாலமாய் கடவுளுக்காக, என் வேலையை அதிஜாக்கிரதையாய்ச் செய்துவருகிறேன். ஓர் நாள், எனது சிநேகிதியாகிய மேற்படி நர்ஸ் வீட்டுக்குப்போய் மீண்டு வரும் வழியில், இதோ இங்கிருக்கும் எனது தம்பியாகிய இவன் டிராம் வண்டியினின்று இறங்கினவுடன் நெருங்கிவந்த கோச்சு வண்டியில் மோதிக் கீழே விழுந்து, மண்டையில் காயம்பட்டு, மூர்ச்சையாகிச் செத்தவன்போல் கிடந்தான். இவனை ஜனங்கள் சூழ்ந்து நெருக்கக் கண்டு, அருகிலணுகி, கையைப்பிடித்து நாடி பார்க்க, நாடி ஓடக்கண்டு, இவனை வண்டியிலேற்றி, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து, என்னாலான உதவியெல்லாம் அவனுக்குச் செய்துவந்தேன். அவனும் சர்வேசுரனின் தயவால் சௌக்கியமானான். அதன் மூலமாக நானிங்கு வரவும், உங்களையெல்லாம் கண்டு களிக்கவும், நான் இன்னாள் என்று அறியவும், அறிந்தவுடன் என்னைப் பெற்ற தாயார், என்னுடன் பிறந்த சகோதரன், சகோதரிகளாகிய உங்களெல்லோரையுங் கண்ணாரக் காணவும் பாக்கியம் பெற்றேன். இதுவே என் விருத்தாந்தம்" என்று சொல்லி முடித்தாள் ஜெயசீலி.

இதைக் கேட்டிருந்த யாவரும் மிகவும் துக்கித்து, "உன் விதி யிப்படியாயிற்றோ? எல்லாம் கடவுள் சித்தம்" எனப் பெருமூச்சுவிட்டார்கள் "நீ இவ்விதத் துன்பப்படவும் நேர்ந்ததே. என் கண்மணியே" என்று தன் மகள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறினாள் சுந்தரம்மாள். கதறி முடிந்ததும் ஜெயசீலி தன் தாயாரைப் பார்த்து, "என்னைப் பெற்றெடுத்த தாயே, உங்களிடத்தில் அடியாள் புத்திரியாக வுதித்து, இவ்வளவு துயரப்படும்படியானதே, என் அதிர்ஷ்டம்" என்று சற்று துக்கித்தபின் "அம்மணி, நீ ரென்னைப் பெற்றவளாயிருந்தீரானால், பெற்றவுடனே என்னை விட்டுப்பிரிய உமக்கு மனம் வருமா? தந்தை என்னதான் சொன்னபோதிலும் தாய் மகளை எறிந்துவிட மனந்தாளுவாளா? அதை விட்டு ஏகவும் கால்தான் எழுமா? பெற்ற அன்னையின் அன்பு இதுதானோ? இவ்வாறு செய்யத் தங்களகம் எப்படிச் சம்மதித்ததோ? அதன் காரணத்தை நான் அறிய விரும்புகிறேன். அறியலாமா?" என்று வினவினாள். அதற்கு தாயார் "என் கண்மணிச் செல்வமே, நீ இதுதானா கேட்பாய்? இதற்குமேலும் பேசவும், என தன்பை யிகழவும்வேண்டியவள்தான். ஏனெனில் நீ அதன் காரணத்தை யறியமாட்டாய். அறிந்திருந்தால், என்னைக் கொன்றுமிருப்பீர்களென்று சொல்லுவாய். அந்தக் காரணத்தை உனக்கு இப்போது சொல்வேனாகில் நீ அகத்தியம் வருத்தப்படுவாய். ஆதலால், உனக்கு அதைச் சொல்லி கண்ணீர் சிந்தவிட எனக்கு இஷ்டமில்லை" என்று சொன்னதின்பேரில் மகளும் தாயார் துக்கத்தைக்கேட்க மனமில்லாதவளாய் வாளாவிருந்துவிட்டாள்.

*
* *

இவ்வாறு ஒரு வாரம் சென்றது. இதனிடையில் ஒரு நாள், ஜெயசீலி, நீலகண்டனைப் பார்த்து, "தம்பீ, நீ எவ்வளவு வாசித்திருக்கிறாய்? உன் வயதென்ன? எனக்கோ உனது ஞானதீட்சையோடு, உனது விவாக உற்சவத்

தையும் கூட்டி ஒரே தினத்தில் மகா அலங்காரமாக முடித்துவிட்டு, சீக்கிரமாய் மடத்திற்குப் போய்த் திரும்பவும் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. ஆதலின் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளையெல்லாம் சீக்கிரம் முடித்துவிட விரும்புகிறேன். நான் உசாவிய வினுக்களுக்குத் தக்க விடைதருவாயா?" எனவும், நீலகண்டன் சொல்லலாயினன். "அருமையக்காளுக்குத் தம்பி நீலகண்டன் ஒளிக்கும் காரியமுமுளதோ? நான் B. L., பாசாகிவிட்டேன். இப்போது, சென்னை ஐகோர்டில் (அப்பிரன்டிசாக) இருந்து நியாயவாதஞ் செய்ய அப்பியசித்துவருகிறேன். எனது கல்வி சோலிகளெல்லாம் ஒழிந்துவிட்டன. இன்னும் இரண்டொரு மாதத்தில் என் வயிற்றுக்குச் சம்பாதிக்கச் சக்தியடைவேன். எனக்கு வயது 23-ஆகிறது. நானும் அவ்வாறே, இவ்விரு காரியங்களையும் ஒருங்கே முடித்துக்கொள்ளக் கருதியிருந்தேன். ஆனல் பெண்விஷயந்தான் ஒன்றும் தோன்ருமல் இருந்தது. அது விஷயத்தை உங்கள் சித்தப்படியே முடித்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்" என்ருன். இவ்வாறு நீலகண்டன் சொல்லவும், "தம்பி, பிராமணக் கூட்டத்தில், கிறீஸ்துவப் பெண்கள் அகப்படுவது அருமை. அன்றியும், என்னை வளர்த்து ஆதரித்த துரைசாமி ஐயருக்கும், அவர் மனைவிக்கும் நன்றியறிதலாக அவர்கள் ஏக புத்திரியாகிய மங்களமரியை கலியாணஞ் செய்துகொள்ளல் தகுதியென்று என் புத்திக்குத் தோன்றுகிறது" என்றுரைத்தாள். நீலகண்டனும், "ஆம், ஆம், அக்காள், நானும் அஃதே எண்ணினேனேயாயினும், உமது சித்தத்தை யறிய விரும்பின பிழையை க்ஷமிக்கவும்" எனப் பணிந்திரஞ்சினன். ஜெயசீலி, "அப்பா தம்பி, என் சித்தத்தை நீ அறியவிரும்பியதும் பிழையாமா? அஃதோர் தப்பன்று" என்றனள். நீலகண்டன் "என தன்பார்ந்த அக்காள், எங்கள் வதுவைக்கும், புஷ்பவல்லியினுடையவும் என்னுடையவும், ஞானஸ்நானத்திற்கும் வேண்டிய சகல காரியங்களையும் சித்தப்படுத்தும் பாரமான வேலையை உமது தலையிலேவைக்கப் பிரியப்படுகிறேன். அதைத் தாங்கிக்கொள்வீர்களா" என்று கேட்க "அதற்கென்ன? மிக்க சந்தோஷத்துடன் செய்கிறேன்" என்று ஜெயசீலி சொல்லிவிட்டு, அதிஜாக்கிரதையுடன் சகல காரியங்களையும் சேகரித்து சித்தப்படுத்தி அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணிக்கு, அவ்வூர் மோக்ஷாலங்காரநாயகியின் திரு ஆலயமானது, இப்பிராமணர்களால் விஜயஞ் செய்யப்பட்டு, நகை முகங்கொண்டு, மகிழ்ச்சியால் பிரகாசித்து விளங்க, அன்று திருநாள் சிறப்போடு சிறப்பாய், மகா ஆரவாரத்தோடு முதல் திவ்யபூசை சடங்குகள் முடிவுபெறவே, ஞானஸ்நானத் தொட்டியருகில் துரைசாமி ஐயரும், அவர் மனைவி சுந்தரமாளும் மகள் மங்களமும், நீலகண்டனும், அவன் தாயார் தங்கம்மாளும், தங்கை புஷ்பவல்லியும், தமக்கை ஜெயசீலியும் ஆகிய இவ்வெழுவரும் அமர்ந்திருக்க, இவர்கள் முகச்செழிப்பினல் அத்தலம், தாமரை மலர்கள் நிறைந்த தடாகத்தை ஒத்திருந்தது. நீலகண்டனுடைய வதனமும், ஜெயசீலியின் முகமும் முழுமதிக் கிரணஞ் ஜொலிக்க, அவர்கள் உள்ளமெல்லாம் சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினதுபோல் காணப்பட்டன. பிறகு சற்று நேரத்திற்குள் சங்கைக்குரிய குருசுவாமிகளால் நீலகண்டனுக்கும் புஷ்பவல்லிக்கும் ஞானஸ்நானச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. நீலகண்டனுக்கு சூசை என்றும், புஷ்பவல்லிக்கு அலங்காரமரி என்றும் நாமகரணஞ் சூட்டப்பட்டது. நீலகண்டனுக்கு துரைசாமி ஐயரும் ஜெயசீலியும் ஞானத்தந்தை தாயாராய் நின்ருர்கள். புஷ்பவல்லிக்கு, சங். குருசுவாமியாரும், சுந்தரவல்லியும் ஞானத்தந்தை தாயாராயினர். உடனே கோவில் மணிகள் கோஷிக்க, ஒருவரையொருவர் தழுவி, மினவி சுபவாழ்த்து கூறி ஆனந்தவாரியில் மூழ்கினர்.

(இன்னும் வரும்.)

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### சங். S. J. பால சுவாமியாரின் வெள்ளி ஜுபிலி.

சென்னை யதிமேற்றிராசனத்தைச் சார்ந்த இராஜரிஷி சங். பால சுவாமிகள் குருப்பட்டம் பெற்று, அடுத்த டிசம்பர்மீ 8-ம் தேதியோடு 25-வது வருஷம் பூர்த்தியாகிறபடியால், அப்பட்டத்தின் வெள்ளி ஜுபிலி மகோற்சவம் தக்க சிறப்புடன் கொண்டாடப்படவேண்டுமென்று கோரிய

ஷை சுவாமிகளின் பங்கு விசாரணைக் கிறீஸ்து வர்களும், அவர் நண்பர்களும், அவ்விஷயமாய் என்ன செய்யலாமென யோசிக்கும்பொருட்டு, 1918ஞ நவம்பர்மீ 10உ காலை 10 மணிக்கு சென்னை, பிராட்வே, அர்ச். சவேரியார் பள்ளிக் கூடத்தில் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதில் சங். மொன்சிக்ஞோர் E. M. ஆஞ்சிலோ சுவாமிகள் அக்கிராசனம் வகித்தனர். அநேக குருமார்களும் பல கனவான்களும் விஜயம் செய்திருந்தனர். அக்கிராசனாதிபதி ஷை சங். S. J. பால சுவாமியாரைக் குறித்து அவர் கிறீஸ்துவர்களுக்கு செய்த அநேக நற்காரியங்களைப்பற்றி புகழ்ச்சியாகப் பேசினார். அவர் விசாரணை செய்துவந்த இடங்களில் கூரைக்கட்டிடமாயிருந்த கோவில்களைமுதலாய் நல்ல கட்டிடங்களாக்கினதையும், அவருக்குள்ள சித்திரவேலை சாமார்த்தியத்தையும், அதற்கு அத்தாட்சியாக அவர் கையினால் அருமையாய்ச் செய்யப்பட்ட பீடவேலை வேப்பேரி அர்ச். பெலவேந்திரர் ஆலயத்தில் நாளையத் தினமும் பார்க்கக் கிடப்பதையும், அக்கோவிலைச்சேர்ந்த சுதேச கன்னியாஸ்திரி மடத்துக் கட்டிடத்தைப் பெருக்கி அழகாய்க் கட்டிமுடித்ததையும், நல்லாயன் பத்திரிகையையும் அதன் அச்சியந்திரசாலையையும் முன்னுக்குக் கொண்டுவர வெகுவாய்க் கஷ்டப்பட்டு உழைத்ததையும், இன்னும் அவர் செய்துள்ள பல பொதுநலத்துக்கான வேலைகளையும்பற்றிப் புகழ்ந்து பேசி, அப்படிக் கஷ்டப்பட்ட குருவானவருடைய ஜூபிலி தினத்தை சிறப்பாய் கொண்டாடல் உசிதமென்றும், அதற்கு எல்லோரும் தாராளமாய் பொருளுதவி செய்தல்வேண்டுமென்றும் சொல்லி தம் முன்னுரையை முடித்தனர்.

அதன் பிறகு சங். ஆனந்து சுவாமிகளும் மகா-ா-ா-ஸ்ரீ தம்பிப் பிள்ளை அவர்களும் ஷை குரு சுவாமியார் தமிழ்க் கிறீஸ்துவர்களுடைய ஞான நலத்தின்பொருட்டு "தர்மம்" என்னும் புத்தகத்தை எழுதி அச்சிட்டு அநேகருக்கு தருமமாகவே அனுப்பியுள்ளாரென்றும், "மரித்தவர்கள் ஸ்மரணை" யென்னும் இன்னொரு புத்தகமெழுதி, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு உதவி புரிவது அவசியமென்று காட்டியிருக்கிறாரென்றும் சொல்லி யவரைப் புகழ்ந்து பேசியபின் அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன :—

1. சங். பால சுவாமியார் குருப்பட்டாபிஷேகத்தின் வெள்ளி ஜூபிலியை தக்க சிறப்புடன் கொண்டாடவேண்டும். அக்கொண்டாட்ட ஜூபிலி தினத்தில் ஒரு சுபசோபன வாழ்த்துப் பத்திரம் வாசிக்கவும், ஒரு ஞாபகச்சின்னம் கொடுக்கவும் வேண்டும். (இக்காரியங்களை ஏற்பாடு செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.)

2. மேற்படி காரியத்தைச் செய்யவேண்டிய பொருள் சேகரஞ்செய்ய ஒரு தண்டல் செய்ய ஜாப்தா பிறப்பிக்கவேண்டும்.

இந்தப்படிக்கு 'ஒரு ஜாபிதா ஏற்படுத்தப்பட்டு ரூ 150 வரையில் அவ்விடத்திலேயே கையொப்பமிடப்பட்டது.

3. மேற்படி ஜூபிலி மகோற்சவத்தை வேப்பேரி அர்ச். பெலவேந்திரர் கோவிலில் அடுத்த டிசம்பர்மீ 8-ம் தேதியை யடுத்த எட்டு நாளுக்குள் ஒரு நாளில் கொண்டாடவேண்டும். (அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச்செய்ய வேறொரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டது.)

ஷை கூட்டத்திற்கு காரியதரிசியாக ஏற்படுத்தப்பட்ட மகா-ா-ா-ஸ்ரீ எ. சி. ஜோசப் அவர்களே ஷை வைபவத்திற்கு வேண்டும் நிதி சேகரஞ் செய்து காரியங்களை நிர்வகிக்க பொக்கிஷதாரராகவும் நியமிக்கப்பட்டனர்.

மேற்படி காரியத்தைச் சரிவர சிறப்பாய் நடத்தும்பொருட்டு பொருள் உதவி செய்கிறவர்கள் சென்னை, வேப்பேரி, சூளை போஸ்டு, அர்ச். பெலவேந்திரர் கோவில் சங். பால சுவாமியார் வெள்ளி ஜூபிலி பண்டின் காரியதரிசி எ. சி. ஜோசப் அவர்களுக்கு அனுப்பலாம்.

A. C. ஜோசப்.

[நமது "நல்ல ஆயன்" சந்தாதாரர்களில் சங். S. J. பால சுவாமிகளை யறியாதவர்கள் அநேகர் இரார். சங். M. J. மிக்கேல் சுவாமிகளால் கீழ்ச்சேரிக்கடுத்த பிளேஸ் தோட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு, மூன்று வருஷகாலமாக அவரால் நடத்தப்பட்டுவந்த இந்த "நல்ல ஆயன்" அச்சியந்திரசாலை சென்னைக்கு மாற்றப்படுவதற்குமுன், இதன் தலைவராகவும் "நல்ல ஆயன்" பத்திரிகாசிரியராகவுமிருந்து இவை யிரண்டையும் விருத்திசெய்யுமாறு ஐந்தாறு வருஷங்களாக அல்லும் பகலும் ஓயாது உழைத்தவர் சங். S. J. பால சுவாமிகளே யாவர். இவை தற்காலம் அடைந்திருக்கும் அபிவிர்த்திக்கு அஸ்திவாரமிட்டவர் இவரே யென்போமானால் அது அபத்தமாகாது. ஆனபடியால், "நல்ல ஆயன்" விருத்தியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் இந்த நல்ல சுவாமியார்மட்டில் பெரிதும் நன்றிபாராட்டக்

கடமைப்பட்டுள்ளார். அவரது குருப்பட்டத்தின் வெள்ளி ஜூபிலியை வெகு சிறப்புடன் கொண்டாடும்பொருட்டு, ஷை கமிட்டியாருக்குப் பொருளுதவி செய்வதோடு, அந்த ஜூபிலி மகோற்சவ தினத்தன்று அவரது ஆத்தும சரீர நன்மைகளுக்காக அம்பரனை அத்தியந்த பக்தியுடன் வேண்டிக்கொள்ளும்படி நமது சந்தாதார நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். கொண்டாட்ட நாள் (டிசம்பர்மூ 17-ம் தேதி) மிகவும் நெருங்கியிருப்பதால், நண்பர்கள் தங்களாலியன்ற தொகைகளை கூடிய துரிதத்தில் ஷை காரியதரிசிக்காவது, நமக்காவது அனுப்பிவைப்பார்களாக. இப்படி யனுப்பும் சந்தாதாரரின் நாமதேயங்கள் நமது "நல்ல ஆய" னில் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

---

## கோயமுத்தூர்.

### அர்ச். பாப்பானவரின் மகா வந். ஸ்தானுதிபதி அவர்களின் விஜயம்.

நெடுநாளாகப் பேராவலுடன் எதிர்பார்த்திருந்த ஷை ஸ்தானுதிபதி அவர்களின் விஜயம் சென்ற சனிவாரத்தன்று (16—11—18) சாயரட்சை 5-20 மணிக்கு நிறைவேறிற்று. ஸ்தானுதிபதி அவர்களை வரவேற்கும்பொருட்டு, இவ்வூர் மேற்றிராணி ஆண்டவரவர்கள் சங். புலாஞ்சர் சுவாமி யவர்களுடன் மோட்டோர் வண்டி ஏறி, போத்தனூர் ஸ்டேஷனை நாடிச் சென்று, ரயில் மார்க்கமாய் அவரை அழைத்துவந்தனர். இம்மகானின் வருகையைத் தரிசித்துத் தக்க மேரை மரியாதையுடன் அழைத்துச் செல்லுமாறு, இப்பங்கினின்றும் இதர பங்குகளினின்றும் அனுப்பப்பட்டிருந்த பிரதிநிதிகளும் ஏனையரும் சில குருப்பிரசாதிகளுடன் ஸ்டேஷனுள் பெருங் கூட்டமாய்த் திரண்டிருந்த கிறீஸ்துவர்கள் யாவரும், புகை ரதம் ஸ்டேஷனைக் கிட்டினதும், கரகோஷ்டம் செய்து ஆர்ப்பரித்தனர்.

ரதத்தினின்றும் இறங்கினவுடன் ஸ்தானுதிபதி யவர்கள் தம் கூட்டத்தாருடன் வேய்ட்டிங் ரூமில் வந்தமர, எக்ஸிகியுட்டிவ் இஞ்சினியர் ஹார்ட்துரை (Hart Esq.) அவர்கள் அவருக்குச் சிறந்த வேர் மாலை சூட்டி, கரங்குலுக்கி, அவருடன் உட்கார்ந்து சிறிது சம்பாஷணை செய்தார். பிறகு, மகா வந். ஸ்தானுதிபதியவர்கள் ம. க. மேற்றிராணி ஆண்டவரவர்களுடன் அழகு வாய்ந்த இரு பரிமாக்கள் பூட்டிய மிக்க கம்பீரமான இரதமேறியமர்ந்ததும், கூடியிருந்த ஜனத்திரள் பாதையின் இரு மருங்கிலும் அணிவகுத்து மெல்லென நகர்ந்து செல்ல, இரதத்தின் முன்னே மேற்றிராசனப் பாண்டு வாத்தியம் முழங்க, அச்சமயம் ஆலயத்து கீதநாதமுற்ற மும்மணிகளும் கலந்தொலிக்க, இரதம் பவனி சென்ற மேரையாய், பாதையில் ஆங்காங்கு நாட்டப்பட்டிருந்த பல சிறப்புற்ற வில்வளைவு தோரணங்களின் கீழ்சென்று, ஆலயத்து வெளி மண்டபத்துமுன் கிட்டி நின்றதும், மகா வந். ஸ்தானுதிபதியவர்கள் கோவிலின் பிரதம வாயிலின் முன் வந்தபோது, அவருக்கு ஆங்கு நிகழ்த்த வேண்டிய வேதாசார அனுஷ்டானங்கள் நடைபெற்றதும், மகா க. ஆண்டவரவர்கள் ஆங்கிலத்தில் ஸ்தானுதிபதியவர்கட்கு சுபசோபன வரவேற்பு வாழ்த்துதல் கூறி, ஆலயத்தினுள் அழைத்துச் சென்றனர். அங்கு ஸ்தானுதிபதியவர்கள் தமதினிய குரல் திறந்து ஆசீரளித்தபிறகு, தேவநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டது.

மறுநாள் காலை 7-மணிக்கு ஸ்தானுதிபதியவர்கள் திவ்ய பலிபூசை ஒப்புக்கொடுத்தனர். இத்திவ்ய பூசையைக் காண ஏராளமான கிறீஸ்துவர்கள் வந்தபடியால், கோவிலினுள் இடம் போதாமல் அவர்கள் ஒருவரொருவருடன் உராய்ந்துகொண்டு வெகு அவஸ்தைப்படவேண்டியதாயிற்று.

அன்று சாயரட்சை, சுமார் 4-மணிக்கு ஸ்தானுதிபதியவர்கள் ஆண்டவரவர்களுடனும் தமது காரியதரிசியுடனும், பாண்டு வாத்திய முழங்க, கோவிற் பிரதம வாயிலின் முன்னர் மகா விசித்திராலங்கிர்தமாய்ச்சிங்காரிக்கப்பட்டிருந்த பந்தரின் கீழ்வந்து தமது சிம்மாசனத்திலமர, ஆண்டவரவர்களும், குருமாரும், ஐரோப்ப, இந்திய கனவான்களும் ஸ்தானுதிபதியவர்களைச் சூழ்ந்து தம் தம் ஆசனத்தி லுட்கார்ந்தனர். பாடகர் குழாம் "அர்ச். பாப்பானவரைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக" எனும் பாட்டைப் பாடத்துவக்கவும், ம-ா-ா-ஸ்ரீ சி. எஸ். தேவசகாயம் பிள்ளை அவர்களால் மிக வந். ஸ்தானுதிபதியவர்கட்கும், ம-ா-ா-ஸ்ரீ சோமனூர் பிச்சைமுத்து செட்டியார் அவர்களால் ம. க. ஆண்டவரவர்கட்கும் நேர்த்தியான வேலைப்பாடமைந்த மாலைகள் சூட்டப்பட்டன. பின்னர், பாடகர் குழாம் மீண்டும் ஓர் பதம் பாடிமுடித்ததும், ஷை ஹார்ட் துரையவர்களால் ஆங்கிலத்திலும், ம-ா-ா-ஸ்ரீ பெரிய நாயக முதலியார் B.A., அவர்களால் திராவிடத்

திலும் ஆக இரு வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. உடனே ஸ்தானாதிபதியவர்கள் எழுந்து ஆங்கிலத்தில் சுருக்கமாய்ச் சொன்ன இனிய மறுமொழியை ஆங்கில மறியாதார்க்கு ம-ா-ா-ஸ்ரீ சி. எஸ். தேவசகாயம் பிள்ளை திராவிட பாஷையில் சுருக்கி விவரித்தனர். இதன்பின், சங். பங்கு சுவாமியவர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, ஸ்தானாதிபதியவர்கள் தயவாய் அளித்த உத்தரவின்மேல், ஆங்கு அமர்ந்திருந்த டெலிகெட்மார்கள் அவரையணுகி மோதிரமுத்தி செய்தனர். பிறகு "கடவுள் நமது அரசரைக் காப்பாற்றுவாராக" எனும் பதம் பாடி முடிந்ததும், யாவரும் கோவிலினுள் சென்று ஸ்தானாதிபதியவர்களால் கொடுக்கப்பட்ட தேவநற்கருணை ஆசீர்வாதத்தை வெகு பக்தி விநயத்துடன் பெற்றுக்கொண்டு தம் தம் இல்லமேகினர்.

இம்மகோற்சவத்தை சிறப்பிக்குமாறு, சங். பங்கு சுவாமியவர்கள் கிறீஸ்துவ சகோதரர் கொடுத்த தாராளமான நன்கொடையைக் கொண்டு கோவில் கம்பவுண்டை சிறப்புற்ற பந்தராலும், பல வில்வளைவுகளாலும் அலங்கிர்தம் செய்திருந்தது மன்றி, கோவிலினுள்ளும் திருப் பலிபீடமும் கண்களைக் கவரும் வண்ணம் ஜோடினை செய்வித்தார்கள். அன்று சுமார் 500 ஏழைகளுக்குப் போசனமும் தருமமும் அளிக்கப்பட்டன.

மூன்றும் நாள் காலையில் ஸ்தானாதிபதியவர்கள், இந்திய ஐரோப்ய கன்னிகா மடங்களையும், மாலையில் புதிதாய் அமையப்பெற்ற ஐரோப்ய பெண் பாடசாலையையும் பார்க்கச்சென்றபோது அன்னோர்களால் முறையே சிறந்த நல்வரவு கொடுக்கப்பெற்றனர்.

பிந்தின நாளாகிய செவ்வாய் முற்பகலின் போது ஸ்தானாதிபதியவர்கள் அர்ச். சூசையப்பர் கைத்தொழிற் சாலையைத் தரிசித்து, ஆங்கு கற்பிக்கப்பட்டுவரும் பற்பல கைத்தொழில் முறைகளைப் புகழ்ந்துபேசினர். அர்ச். மிக்கேல் ஹைஸ்கூல் சென்று, ஆங்கு பிரதி வகுப்பினுள்ளும் நுழைந்து, ஆசிரியர், மாணாக்கர் யாவருடனும் வார்த்தையாடி சுமார் உச்சிப் பகலின்போது தமதிருப்பிடம் ஏகினர். அன்று சாயரட்சை ஷை ஹைஸ்கூலில் கத்தோலிக்கு மாணவராலும், அதைச்சார்ந்த அனாத மடத்துப் பிள்ளைகளாலும் வரவேற்பு உபசாரம் செய்யப்பெற்றார். அவர்கள் பாடிய வினியதோர் நல்வரவு பதத்தை இன்புறக்கேட்டு, சூடிய சிறந்த வோர் மாலையை மலர்முகத்துடன் தமது கழுத்தி லணிந்துகொண்டு, வாசிக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரத்தைச் செவிகுளிரக் கேட்டவுடன், தங்தைக்குரிய வன்பொடு அம்மாணவர்கட்கு ஆங்கிலத்தில் சிறிது உபன்னியாசம் செய்தனர். பின்னர், ம. வங். ஸ்தானாதிபதியவர்களுக்கும் ம. க. ஆண்டவரவர்களுக்கும், அர்ச். பாப்பரசருக்கும், நமது காருண்யச் சக்ரவர்த்தி யவர்களுக்கும் வாழ்த்துதல் கூறப்பட்டு, சம்பவம் முற்றுப் பெற்றது.

20—11—1918. சி. எஸ். தேவசகாயம்.

---

## "மரியாயின் சங்க"மும் "கத்தோலிக்கு ட்ரூத் சோஸையிட்டி"யும்.

ஐயா,

கத்தோலிக்கு வேத விஷயங்களை, கத்தோலிக்கரல்லாதார்க்கு விளக்கிக்காட்டுதல் முதலியவைகளால் இந்தியர்களை மனந்திருப்பும் வேலையை மேற்கொண்டு "கத்தோலிக்கு ட்ரூத் சொஸையிட்டி" என்னுமோர் "வேதம் பரம்புதல் சபை" ஸ்தாபிப்பதற்கு வேண்டிய பொருளுதவியையும், மற்ற உதவியையுங் கேட்டு, திருச்சினாப்பள்ளி சேசு சபையைச் சார்ந்த சங். லக்கோம் சுவாமிகளும், கனம் ஏ. ஜெகந்நாதப் பிள்ளை யவர்களும் சேர்ந்து, வெளியிட்ட ஒரு துண்டு புத்தகத்தை நான் பார்வையிட்டேன். அஞ்ஞானிகளின் ஆத்தும ஈடேற்றத்தைக் கருதிய சபையொன்று இதுகாறும் இல்லாத குறை உள்ளபடியே எல்லோராலும் உணரப்பட்டுவந்தது. இப்பேர்ப்பட்ட சபையொன்று ஸ்தாபிக்கவேண்டிய அவசியத்தை ஆட்சேபிப்பவர் எவரும் இரார். கத்தோலிக்கர் எல்லோரும் அதை ஸ்தாபிக்கப் பிரியங்கொள்வார். ஆயினும் மேற்கூறிய புத்தகத்தில் பிரேரிக்கப்பட்டிருக்கிறபடி, அச்சபையைச் சேரும் அங்கத்தினர்கள் கொடுக்கும் சந்தா தொகைகளைக்கொண்டு அதன் மகத்தான கருத்துக்களை நிறைவேற்றுவது எவ்வளவும் சாத்தியமல்ல. கத்தோலிக்கருக்குள்ளிருக்கும் பிரபுக்கள், கனதனவான்கள், மிட்டாதாரர்கள், மிராசுதாரர்களான ஐஸ்வரியவான்கள் அனைவோரும் தங்கள் தங்கள் ஐஸ்வரியத்துக்குத்தக்கபடி நன்கொடைகளை தாராளமாய்க் கொடுத்து இந்தக் காரியத்தைக் கைகூட்டுவிக்கவேண்டும். மேலும் சில வருஷங்களுக்கு முன்னே மரியாயின் சங்கத்துக்காகச் சேகரிக்கப்பட்டுள்ள பெருந்தொகையை எவ்வாறு விநி

யோசிப்பது என்பதைப்பற்றி, விவாதங்கள் நடந்தபோது பற்பலரும் பற்பல பிரேரணைகள் செய்தார்கள். அவைகளுக்குள், கனந்தங்கிய மயிலை மேற்றிராணியாண்டவரவர்கள் செய்த பிரேரணை பெரும்பாலோருக்குத் திருப்திகரமாயிருந்தது. அதாவது, அபரிமிதமாய் வீணடம்பரங்களிலும், வாண வேடிக்கைகளிலும் பெருந்தொகையைச் செலவழித்துவிடாமல் அவற்றிற்கெல்லாம் சிறப்பிக்கும் காரியத்தின் கனகனத்துக்குத் தக்கபடி மிதமாய்ச் செலவுசெய்து மிச்சம்பிடித்து, அதில் ஒரு பகுதியை யிப்போது "கத்தோலிக்கு டிராக்ட் சொஸைட்டி" போன்ற பரோபகார சபைக்காகவும், இன்னொரு பகுதியை சென்னையில் அத்தியாவசியமாய் ஸ்தாபிக்கப்படவேண்டிய, "கத்தோலிக்கு மாணவர் விடுதி"க்காகவும் கொடுப்பதாகும். இதுவே என்னுடைய பிரேரணையுமாகும். இந்த இரண்டு ஸ்தாபனங்களும் கத்தோலிக்கருக்கு பெரிதும் பிரயோஜனமானவைகளென்பதும், கூக்குரலிடும் தேவைகளென்பதும் யாவராலும் மறுக்கப்படக்கூடியனவல்ல. ஆயினும், ஒரு விசேஷ கருத்துக்காக வசூல் செய்யப்பட்ட தொகையை பிறிதொரு கருத்துக்காகச் செலவிடுவது ஞாயமல்லவெனச் சாற்றுகிறார் சிலர். முதற்கொண்ட கருத்தை திரஸ்கரித்துத் தள்ளிவிட்டு வேறொன்றைச் செய்யும்படி நான் பிரேரிக்கவில்லை. முதற்கருத்தைப் போதுமான பிரகாரம் நிறைவேற்றியபிறகு, மிகுதியாயுள்ள தொகையைப்பற்றியே இப்போது பேசப்படுகிறது. அதையும் நன்கொடையளித்த நண்பர்களின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டே செய்தல்வேண்டும். அந்நண்பர்களில் ஒருவரேனும் ஷை அதிபிரயோசனமான இரண்டு காரியங்களைச் செய்வதற்கு அனுவளவேனும் ஆக்ஷேபனை கூறார். இவ்விஷயத்தை ஷை கத்தோலிக்கு டிரூத் சொஸைட்டியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சற்று யோசிப்பார்களெனக் கோருகிறேன்.

மா. பா. து.

---

## சென்னை பரோபகார சங்கத்திற்கு ரூபாய் 20,000 வேண்டுமோம்.

சென்னை கிறீஸ்துவ பரோபகார சங்கத்தார்கள் கோரியபடி ரூபாய் 20,000 வேண்டுமோயின், தங்களுடைய சங்கத்தில் சென்னை பலபாகங்களிலும் கோவாப்ரேட்டிவ் என்னும் சங்கத்தை ஸ்தாபித்தால், ஈர் இரண்டுவருஷத்தில் அந்த இருபதினாயிரம் ரூபாயைச் சம்பாதித்துக் கொள்ளுவதுமன்றி, ஊதாரிக் கிறீஸ்துவர்களைச் செட்டுத்தனத்தில் நடப்பிக்கவும் வழியாகும். அநியாய வட்டி கொடுத்து அல்லல்படுகின்றவர்களை மீட்டுவிட்ட புண்யமும் பிராப்தமுமாகும். கிறீஸ்துவர்கள் முன்னேற்றமடைய பற்பல ஆபத்துக்களில் உதவியும், பிரதி கோவாப்ரேட்டிவ் சங்கத்திலும் கிறீஸ்துவ குமஸ்தாக்கள் பிழைக்க ஏற்பாடுமோகும். அன்றியும் எளியோர்கட்கும் மற்ற வேலைக்காரர்களுக்கும் எவ்விஷயத்திலும் உதவி கிடைக்கும். அஃதின்றி ஷை பரோபகார சங்கத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தே பணத்தைச் சேகரஞ்செய்து சங்கத்தின் பல கருத்துக்களை நிறைவேற்றவேண்டுமாயின், மிகவும் சிரத்தையெடுக்க வேண்டுவதோடு இருபதினாயிரம் ரூபாய் சம்பாதிக்க குறைந்தது 20-வருஷம் செல்லும். காலதாமதம், பெருங் கஷ்டம் நேரும். சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் அலுத்துப்போனால் சங்கம் தளர்வடைந்துபோம்; கடைசியாய் திரவிய சேகரமில்லாவிட்டால் சங்கம் க்ஷீணதிசையடையும். எடுத்த காரியம் அவலமாகாவண்ணம், வெள்ளம் வருமுன் அணை போட்டுக்கொள்ளுதல் நன்று. "முயற்சி திருவினையாக்கும்." கோவாப்ரேட்டிவ் சொஸைட்டி மூலதனங்கொடுக்கும். அதினால் சென்னை பரோபகார சங்கம் பெருகி நீடூழி வாழும். அப்படியே யாகக்கடவது.

ஓர் கிறீஸ்துவன்.

---

## பரிசுத்த நற்கருணையின் வல்லமை.

திருச்சபைக்குச் சத்துராதிகளாய் இருப்போமென பிரமாணம்பண்ணிக்கொண்ட ஸாரசன்ஸ் என்பவர்களின் உதவியைப் பெற்ற மகா துஷ்ட இரண்டாம் பிரடரிக் (Frederic) என்னும் சக்கரவர்த்தி சத்திய திருச்சபையைத் தொலைக்கத் தலைப்பட்டான். ஆகையால் அவன் கட்டளைப்படி அவர்கள் நெருப்பினாலும் கொடிய செயல்களாலும் இத்தாலியா தேசத்தின் ஓர் பாகமாகிய ஸ்போலியோதோ (Spoleoto) வெனும் தேசத்தை நாசம்பண்ணி, அவ்விடத்திய திருச்சபையைப் பங்கப்படுத்த தேவாலயங்களையும் கன்னியர் மடங்களையும் அழித்தார்கள். அசிசி என்னும் ஊரை முற்றுகையிட்டு, அர்ச். கிளாரம்மாள் சிரேஷ்டதாயாராக இருந்த அர்ச். தொமியான் மடத்தைத் தகர்த்துக் கொள்ளையடிக்க எத்த

னித்தபோது, அந்த பரிசுத்த கன்னியாஸ்திரியாதோர் உதவியுமின்றி கடவுளின்பேரிலேயே மெய்யான நம்பிக்கைவைத்துத் தான் அசௌக்கிய முற்றிருந்தபோதிலும் தானே மடத்து வாசலுக்குப் பரிசுத்த பரம திவ்யநற்கருணையைக் கையி லேந்திக்கொண்டு சென்றாள். சாரசன்ஸ் என்பவர்கள் அதிலே எழுந்தருளியிருந்த மெய்யான தேவனை நோக்கினதும் வெகு பயங்கரங்கொண்டு திக்பிரமையடைந்ததோடு தங்களுடைய ஆயுதங்களையும் சண்டை எத்தனங்களையும் கைநெகிழவிட்டுப் பின்னிடைந்து ஓடினார்கள். அப்போது மோட்சத்திலிருந்து "நாம்தாம், பயப்படாதே. உன்னை நாம் காப்பாற்றுவோம்" என்ற தொனியை அர்ச். கிளாரம்மாள் கேட்டாள். இல்லாவிடில் அம்மடத்தையும் அவ்வூரையும் அவர்கள் சவக்களமாக்கியிருப்பார்கள். இடியையும் மின்னலையும் படைக்கலமாகக் கொண்டிருக்கும் சர்வ வல்லப சர்வேசுரனை இவர்களால் எதிர்க்கலாகுமோ!

தூத்துக்குடி, 19—10—18. } இங்ஙனம், ஜே. பிச்சை றெட்றிகஸ்.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

ஆகாயத் தபால்.—இனி இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் தபால்களை ஆகாய விமானங்கள் மூலமாய்க் கொண்டுபோவதற்காக பெரிய் பெரிய ஆகாயக் கப்பல்கள் துரிதமாய்த் தயார்ப்படுத்தப்படுகின்றன.

ஹாலந்தின் நடு நிலைமை.—ஜெர்மன் சேனைகளை லிம்பர்க் முதலிய விடங்களில் செல்லவிட்டதனாலும், மாஜி கைஸர் சக்கரவர்த்தியை தங்களூரில் ஏற்றுக்கொண்டதனாலும், உலாந்தாக்காரர் தங்கள் நடு நிலைமையினின்றும் பிறழ்ந்துவிட்டார்களென்று, நேச ராஜ்ஜியங்கள் ஹாலன்டைக் கண்டனஞ்செய்திருக்கின்றன.

வெள்ளி ஜூபிலி.—"நல்ல ஆயன்" பத்திரிகையின் பழய பத்திரிகாசிரியராகிய சங். எஸ். ஜே. பால சுவாமிகள் குருப்பட்டம்பெற்று, 25-வருஷமாகிறபடியால், அந்த சம்பவத்தைக் குறித்து வெள்ளி ஜூபிலி கொண்டாடுவதற்காக ஏற்பாடு நடந்துவருகிறது. இதைப்பற்றிய விவரங்கள் கடிதங்கள் பத்தியில் காணப்படும்.

சமாதான கான்பரன்ஸ்.—சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஆலோசித்துத் தீர்மானஞ் செய்யக்கூடப்போகும் மந்திராலோசனைச் சபைக்கு சர். எஸ். பி. சின்னாவும், பிக்கானிர் மகாராஜாவும்போகிறார்கள். இத்தேச மன்னர்களுக்கும், தலைவர்களுக்கும் பிரதிநிதியாக ஷை மகாராஜா அவர்கள் போகிறார்கள். இந்தியா கவர்ன்மென்ட் தரப்பில் சர். சின்னா அனுப்பப்படுகிறார்.

கெயிஸர்.—அதிக பயங்கரமான ஐரோப்பா மகா யுத்தத்திற்கு மூலகாரணரான கெயிஸர் சக்கரவர்த்தி யிப்போது தோற்றுப்போனாரல்லவா? இந்த யுத்த சம்மந்தமாய் ஜெர்மனியர்கள் செய்துள்ள கொடிய அக்கிரமங்களுக்குக் காரணாரன அந்தப் பெரிய குற்றவாளியை நெப்போலியனை சென்ட் ஹெலினா தீவில் சிறைப்படுத்தியதுபோல் கைதியாக்கி, ஓர் தனியிடத்தில் சிறைப்படுத்திவைக்க வேண்டுமென்று இங்கிலாந்தில் ஒருவர் பிரேரிக்கிறார்.

கடல் சுதந்தரம்.—ஐரோப்பிய மகா யுத்தமானது இவ்வளவு சீக்கிரத்தில் முடிவாவதற்கு உப பலனாயிருந்துதவிய, அமெரிக்கா ஐக்கியமாகாணத்துத் தலைவராகிய டாக்டர் வில்சன், பிரான்சின் தலை நகரமாகிய பாரிஸ்பட்டணத்தில் நடைபெறப் போகிற சமாதானக் கான்பரன்சின் வேலை வெகுவாய் முற்று முடியுமட்டு மிருக்கப் போவதோடு, கடல் சுதந்தரத்தைப்பற்றிய விவாதங்களை யறுத்துப் பேசி, அதை நியாயமான முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதில் விசேஷ சிரத்தை கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.—தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் வருஷாந்தப் பொதுக்கூட்டம், இவ்வருஷம், திருச்சினாப்பள்ளியில், அர்ச். சூசையப்பர் காலேஜைச்சார்ந்த லாலி ஹாலில் டிசம்பர் மாதம் 27-ந் தேதியாகிய வெள்ளிக்கிழமை காலை 10-மணிக்கு நடைபெறுமென்று அச்சங்கத்தின் கௌரவ காரியதரிசி அறிக்கை யிட்டிருக்கிறார். சென்னை யதி மேற்றிராணியாரும் ஷை